Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 04 ஞாயிற்றுக்கிழமை (18.05.2014) பக்கங்கள் 20 ஓசை – 229

- வேகக்கட்டுப்பாட்டை இழந்து -

## கோவில் வாகனசாலைக்குள் உட்புகுந்தது இராணுவ "ட்ரக்"



(யாழ்ப்பாணம்)


வேகக்கட்டுப்பாட்டை இழந்த இராணுவ ட்ரக் வண்டி யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியிலுள்ள நாச்சிமார் கோவிலின் வாகன சாலைக் கட்டடத்தை உடைத்து உட்சென்றதனால் கோவிலின் வாகனங்கள் சேதமடைந்ததுடன், 3 இராணுவத்தினர் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் இலங்கை மின்சாரசபை ஊழியரான ரத்னாயக்க (கோகாலை), பலாலி படைத்தலைமையகத்தைச் சேர்ந்த எம்.ஆர். பண்டார (வயது 30) இ.எம்.ஷமகே

19 ஆம் பக்கம் பார்க்க

## சங்கானையில் கோரவிபத்து; இளைஞர் தலை சிதறிப் பலி

சங்கானையில் நேற்று மாலை 5.15 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் தலை சிதறிப் பலியானார். சங்கானை 7ஆம் கட்டை வீதியில் உள்ள கூடத்து அம்மன் கோவிலுக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஒழுங்கையில் இருந்து வந்து பிரதான வீதியில் ஏறிய மோட்டார் சைக்கிளை கன்ரர் வாகனம் மோதி சுமார் எழுபத்தைந்தடி தூரம் வரையில் இழுத்துச் சென்றதில் இளைஞர் உயிரிழந்தார். காரைநகரைச் சேர்ந்த தேவலிங்கம் வசிகரன் (வயது 28) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். சம்பவ இடத்திற்கு வந்த மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர் தனது உறவினருடைய திருமணத்திற்காக கொழும்பில் இருந்து நேற்றுத்தான் யாழ்ப்பாணத்திற்கு வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் மானிப்பாய் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



# இந்திய உறவு சீர் கெடாமலிருக்க 13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்

### அரசுக்கு கூறுகிறார் தயான்ஜயதிலக

(கொழும்பு)

இந்தியாவில் புதிதாகப் பதவியேற்கவுள்ள மோடி தலைமையிலான அரசாங்கத்துடன் நல்லெண்ணத்தை தக்கவைத்திருக்கவேண்டுமெனில் 13ஆவது திருத்தச் சட்டத்தை காலதாமதமின்றி அமுல்படுத்தவேண்டுமென இலங்கையின் முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக அரசிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது

இந்தியாவில் ஏற்படும் ஆட்சி மாற்றம், நிச்சயமாக இலங்கையிலும் தாக்கங்களை ஏற்படுத்தும்.

இலங்கையின் அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக இந்தியா இதுவரை கொடுத்து வந்த அழுத்தங்கள் நரேந்திர மோடி ஆட்சியிலும் தொடரும். இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் நல்லெண்ணத்தை தக்க வைத்திருக்க வேண்டுமாயின், காலதாமதம் இன்றி அந்த திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும்.

இந்தியா கொண்டுள்ள இந்த நிலைமையின் கீழ் இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் செயற்படுத்தப் படுவதை தொடர்ந்தும் தாமதித்தால், நண்பன் பகைவனாகக் கூடும். நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி இந்து இனத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட அரசியல் சக்தி என்பதால், புதிய ஆட்சியின் கீழ் இந்தியா முன்னரை விட பலமான இந்து நாடாக எழுச்சி

19 ஆம் பக்கம் பார்க்க

## மோடியுடனான அரசுடன் புதிய அணுகுமுறை தேவை

### என்கிறார் ரணில்

இந்தியாவில் புதிதாக ஆட்சி ஏறும் பாரதிய ஜனதாக் கட்சியின் அரசாங்கத்துடன் ராஜதந்திரத் தொடர்புகளை மேற்கொள்ளும் போது, அரசியல் ரீதியாக புதிய நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய ஆட்சி மாற்றம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியாவில் புதிய மாற்றம் ஒன்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய வெளிவிவகார கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கமும் புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி பாரதிய ஜனதாக் கட்சி அரசாங்கத்துடன் இராஜதந்திர உறவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் இந்திய மத்திய அரசாங்கத்தின் அங்கமாக இல்லாவிட்டாலும், இலங்கை விடயத்தில் இரண்டு

19 ஆம் பக்கம் பார்க்க

## அனைவருடனான கலந்துரையாடலே இலங்கையில் சமாதானத்திற்கு வழி



### கூறுகிறது ஐ.நா.

இலங்கையில் அனைத்து தரப்பினர் மத்தியிலும் கலந்துரையாடல்கள் இடம்பெறுவதன் மூலமே இறுதிச் சமாதானத்தையும், அபிவிருத்தியையும் அடைய முடியும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் செயலாளரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் இந்தக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

2009 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூனும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் இணங்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையுடன் வலுவான உறவு; எதிர்பார்க்கும் நரேந்திரமோடி

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் வலுவான உறவுகளை தாம் எதிர்பார்ப்பதாக, இந்தியப் பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது டுவிட்டர் பக்கத்தில், நரேந்திரமோடியுடன் தாம் நேற்று முன்தினம் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தது குறித்தும் அவரை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தது குறித்தும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு நரேந்திர மோடி டுவிட்டரில் பதிலளிக்கையில், உங்களுடன் பேசியது அருமையாக இருந்தது.

நான் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் வலுவான உறவுகளை எதிர்பார்த்திருக்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

**உள்ளே** தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்

## 300இற்கும் மேற்பட்ட கடாக்கள் பிரான்பற்றில் வெட்டிச்சரிப்பு



பண்டத்தரிப்பு பிரான்பற்று கட்டுவரைப் புளியடி அம்மன் ஆலயத்தில் நேற்றுக் காலை நடந்த மிருக வேள்வியில், 300 இற்கும் மேற்பட்ட ஆட்டுக் கடாக்கள் வெட்டிச் சரிக்கப்பட்டன ஆலயத்தில் இடம்பெற்ற பொங்கல் படையல்களைத் தொடர்ந்து கடா வெட்டும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட கடாக்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## வட, கிழக்கைச்சேர்ந்த 20பேர் மாத்தறையில் கைது

மாத்தறை நகரில் சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த நிலையில், நேற்று முன்தினமிரவு 20பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

சந்தேகநபர்கள் வீதி அபிவிருத்திப் பணிக்காக மாத்தறைக்கு வந்திருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மாத்தறை நீதவான் முன்னிலையில் நேற்று முற்பகல் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நீதவானின் உத்தரவிற்கமைய மட்டக்களப்பைச் சேர்ந்த 09 சந்தேகநபர்களில் மூன்று பேர் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

ஏனைய ஆறு பேரும் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட வட பகுதியைச்

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் கண்டித்து ஊர்வலம் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவரின் அத்துமீறிய மீன்பிடியைக் கண்டித்து யாழ்.குடாநாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தவுள்ளதாக யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் சமாசத்தின் தலைவர் நாகநாதி பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விரைவில் கிராமிய கடற்றொழில் சம்மேளனக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அதன் பின் னர் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கென திகதி தீர்மானிக்கப்படவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

# கலாசாரமான ஆடைகளை அணிந்து நல்லூர் திருவிழாவில் கலந்து கொள்ளுங்கள்

## சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் அறிவுறுத்து


(யாழ்ப்பாணம்)

கலாசார விழாவாக இடம் பெறும் நல்லூர்க் கந்தனின் திருவிழாவில் கலந்து கொள்ளும் அனைவரும் இந்து கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில ஆடை அணிந்து கொள்ளவேண்டும் குறிப்பாக இளைஞர் யுவதிகள் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும் என சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

வெள்ளியன்று யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற நல்லூர்க் கந்தன் திருவிழாவிற்கான ஒழுங்கமைப்பு தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விழா ஆரம்பமாகுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே நாம் இந்து கலாசார விழுமியங்களை கடைப்பிடிப்பது தொடர்பிலான துண்டுப்பிரசுரங்கள் ஊடாக செய்திகள் என்பவற்றுடன் பதாகைகளை தொங்கவிட்டு எமது இளைஞர், யுவதிகள் மத்தியில் கலாசார உடை மற்றும் கலாசார விழுமியங்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளோம். எமது பிள்ளைகளை நாமே திருத்திக்கொள்வது சிறந்தது சட்டத்தின் மூலமாக அல்லாது இவ்வாறான விழிப்புணர்வின் மூலம் அதற்கான ஏற்பாடுகளை நாம் மேற்கொள்ளவுள்ளோம்.



உலகிலுள்ள இலங்கை இந்துக்கள் எல்லோரும் எமது ஆலய விழாவென இங்கு வருகிறார்கள் ஆனால் இங்கு இருக்கின்ற இடர்பாடுகள் குறித்து அனைவருமே மனம் வருந்துகின்றனர்.

எனவே அனைவரும் ஒன்றிணைந்து எமது விழாவாகக் கருதி ஒற்றுமையான முறையில் இந்து கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இப்பெருவிழா இம்முறையும் அமைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார். (இ)


## சிறு விளம்பரங்கள்

### வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை வருகை தரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும், குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். தொ.பே-0710854068.

□ □ □ □ □

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000.00-35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். தொ.பே-0775964299 (R/348)

□ □ □ □ □

### டயானா பிளாஸ்ரிக்

*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)


# திருநெல்வேலியில் விபத்து யுவதி படுகாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி. சந்தியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் யுவதி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தில் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த அருணாசலம் கங்கா (வயது-26) என்ற யுவதியே படுகாயமடைந்துள்ளார்.

கோண்டாவில் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்தில் இருந்து திருநெல்வேலி நோக்கி பயணித்த பேருந்துமே மோதி விபத்துக்குள்ளாகின இது குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

# உறக்கத்திலிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலி அறுப்பு

## சண்டிலிப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் மேற்கு பிரதேசத்திலுள்ள வீடொன்றில் கடந்த புதனன்று கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

வீட்டின் கதவு பூட்டப்படாத நிலையில் வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்த பெண்ணின் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளதுடன் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சங்கிலி அறுக்கப்பட்ட போது உறக்கத்திலிருந்து எழுந்த பெண் எழும்பிய சத்தத்தை தொடர்ந்து கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் மானிப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 256 |
| திகதி - | 2014.05.16 |
| வர்ணம் - | நீலம் |

வெற்றி இலக்கங்கள்: 04 40 41 46 — ஆங்கில எழுத்து: O

பரிசுத் தொகை ரூபா. 18,854,000/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 04 | 200,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 211 | 211,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 363 | 363,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8866 | 531,960/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4783 | 191,320/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 116053 | 2,321,060/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16675 | 333,500/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 18,854,000/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,151,840/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 19,081,320/-

2014.05.20ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3673)


# தனக்குத் தானே தீ மூட்டிய குடும்பஸ்தர் வைத்தியசாலையில்


(கிளிநொச்சி)

தனக்குத் தானே தீ மூட்டிய இளம் குடும்பஸ்தர் தீக்காயங்களுக்கு ஆளான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வட்டக்கச்சி இராமநாதபுரத்தைச் சேர்ந்த மயூரன் (வயது-21) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு தனக்குத் தானே தீமூட்டியுள்ளதாக பொலிஸ் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக நேற்று முன்தினமிரவு 7 மணியளவில் மண்ணெண்ணை ஊற்றி தனக்கு தானே தீ மூட்டியுள்ளார்.

அயலவர்களால் தீ அணைக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



ம/நு/ டலோஸ் தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு நேற்றைய தினம் வருகை தந்த போது (18)

# இறைச்சிக்காக மாடுகள் வெட்டும் இடம் சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்துகிறது

## — பிரதேசமக்கள் குற்றச்சாட்டு —



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுகின்ற இடம் மிகவும் ஆபத்தான சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்தும் நிலையில் காணப்படுவதாக பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்

கிளிநொச்சி நகரில் இருந்து நான்கு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள அம்பாள் குளம் பகுதியிலேயே இறைச்சிகாக மாடுகள் வெட்டப்படுகின்ற கொல்களம் காணப்படுகிறது. இங்கு நாளாந்தம் பல மாடுகள் வெட்டப் பட்டு வருகின்றன. ஆனால் மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் அமைந்துள்ள இந்த கொல்களத்தின் கழிவுகள் அகற்றப்படுவதற்கான எவ்வித அடிப்படை ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படாலும், கொல்களத்தின் பாதுகாப்பையும், சுகாதாரத்தையும் உறுதிப்படுத்தும் வகையிலான சுற்றுமதில் உட்பட கட்டமைப்புகள் உரிய முறையில் அமைக்காமல் நாளாந்தம் மாடுகள் வெட்டப்படுவதால் குறித்த அந்த இடம்சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலையும் ஆபத்தையும் ஏற்படுத்தும் நிலையில் காணப்படுகிறது.

இந்த ஆபத்தான நிலைமைகளை பார்வையிட்ட மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர் தங்களின் வாழ்விடங்களுக்கு அருகில் அமைந்துள்ள கொல்களத்தில் சுகாதார பாதுகாப்புக் கருதி சிறு ஏற்பாடுகள் கூட இல்லாமல் இருப்பதாக கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த கொல்களத்தின் கழிவுகள் திறந்த வெளியில் விடப்படுவதாலும் வெளியேறுகின்ற இரத்தம் திறந்த குழியில் விடுகின்றமையினாலும் அந்தச் சூழல் துர்நாற்றம் வீசுகின்ற இடமாகவும் இலட்சக்கணக்கான ஈக்கள் மற்றும் புளுக்கள் என்பன நிறைந்து காணப்படுவதோடு காகங்களாலும் நாய்களாலும் எடுத்துச் செல்லப்படும் கழிவுகள் மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் விடப்படுவதாலும் மக்கள் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

கிளிநொச்சியில் அதிகளவு இலாபம் தரக்கூடிய வியாபாரமாக இறைச்சி விற்பனை செய்யப்படுகின்ற போதும் மாடுகள் வெட்டப்படுகின்ற கொல்களத்தில் எவ்வித அடிப்படை சுகாதார வசதிகளும் ஏற்படுத்தப்படாமை மக்களை விசனத்திற்குள்ளாக்கியுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச வாழ் பொது மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (29)

# பிரதேசசபைத் தவிசாளர் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தை நினைவுகூர்ந்து யாழ்.கரவெட்டி தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்த முற்பட்டபோது, சபைத் தவிசாளர் பொ.வியாகேசு வெளிநடப்புச் செய்தார் அதனைத்தொடர்ந்து அவையின் செயலாளரும் சபையிலிருந்து வெளியேறினர்.

எனினும், ஏனைய 13 உறுப்பினர்களும் சேர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தை சபையில் நினைவுகூர்ந்தனர். மேற்படி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தவிசாளர் தலைமையில் ஆரம்பமானது.

உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தியபின்னர் மாதாந்தசபை அமர்வை நடாத்துவதற்காக சபைக்குள் தவிசாளர் உள்நுழைந்தபோது, 3 உறுப்பினர்கள் தவிசாளரின் செயலினைக் கண்டித்து வெளிநடப்புச் செய்தனர்.

மேற்படி சபையில் 18 உறுப்பினர்கள் இருப்பதுடன், அவர்களில் 16 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களாவும் இருவர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களாகவும் இருந்தனர்.

# சாவகச்சேரி சண்முகம் வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட வீதியின் புனரமைப்பு பணிகள் கடந்த புதன்கிழமை காலை 9 மணிக்கு நகரசபையின் தலைவர் தேவசகாயத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நகரசபையின் 2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு நிதியிலிருந்து 7 மில்லியன் ரூபா செலவில் 1 கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்படவுள்ளதாக நகரசபைத் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் நகரசபையினால் நடாத்தப்பட்ட பொதுமக்கள் கலந்துரையாடலில் பொதுமக்கள் முன்னுரிமை அடிப்படையில் இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)


# கால்நடை வளர்ப்போர் கூ.சங்கம் பொதுமுகாமையாளர் இராஜினாமா

சண்டிலிப்பாய் கால்நாடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.தனலிங்கம் தனது இராஜினாமா கடிதத்தை வழங்கி பதவியில் இருந்து விலகியுள்ளார்.

கடந்த ஆண்டு முதல் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் தொடர்ச்சியான நஷ்டத்தில் இயங்கி வந்தது. இதனை அடிப்படையாக வைத்தே பொதுமுகாமையாளர் பதவியில் இருந்து விலக கடிதத்தை நெறியாளர் குழு தலைவரிடம் வழங்கி இருந்தார்.

கடந்த வாரம் இடம் பெற்ற கூட்டத்தில் கடிதம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டதுடன் இராஜினாமா கடிதத்தை ஏற்கும் படி கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் குழுவுக்கு பரிந்துரை செய்திருந்தார். இதன் அடிப்படையில் எதிர்வரும் 31 ஆம் திகதியின் பின்னர் புதிய பொதுமுகாமையாளரை நெறியாளர் குழு முறைப்படி நியமிக்கும் என கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலக செய்திகள் தெரிவிக்கின்றன.

# நேர்த்தி வைச்சே கொழும்பை விழுத்திறதுக்கும் சைற்றில திட்டமிருக்கு....




அரசாங்கத்தில இருக்கிறதா – போறதா? எண்டு ஒரு போடு போட்டிருக்கிறார் விமல் வீரவன்ச.

பங்காளிக்கட்சிகளுக்குள் குத்து வெட்டு எண்ட மாதிரி ஒரு இங்கிலிஷ் பேப்பரில செய்தியும் கார்ட்டூனும் வந்திருந்திது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வாங்கோ. தெரிவுக்குழு மூலமாக தீர்வுத்திட்டத்தை நேர்மையாக வைச்சு, இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வை அரசாங்கம் முன்வைக்கேல்லை எண்டால், அரசாங்கத்தில இருக்கிறதைப் பற்றி – அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிறதைப் பற்றிப் பரிசீலிப்பேன் எண்டிருக்கிறார் டக்ளஸ் தேவானந்தா.

இப்பிடிக் கொஞ்சம் கொதிக்கத் தொடங்கியிருக்கு அரசாங்கத்துக்குள்ள.

ஆனால், என்னதான் கொதிச்சாலும் இப்போதைக்கு ராஜபக்ஷ கொம்பனியை ஆராலும் லேசில விழுத்தேலாது எண்டதும் உண்மை.

அந்த அளவுக்கு ராஜபக்ஷ கொம்பனியைக் கவனமாகக் காப்பாத்திக் கொண்டிருக்கினம் சிங்கள ராசதந்திரிகளும் பொலிஸி மேக்கேர்ஸ்களும் – அதாவது கொழும்பின்ரை திங்ராங்ஸ்களும்.

இதைத்தான் சொல்லிறது என்னதான் உள்ளுக்குள்ள குத்துப்பட்டாலும் அவங்கள் அவங்கள்தான் எண்டு.

இப்ப அமெரிக்காக்காரன் வந்து கொழும்பின்ரை கழுத்தை நெரிக்கட்டும். விமல் என்ன சொல்லிறார் எண்டு பாப்பம்? உடன சிங்கன் அமெரிக்கத் தூதரகத்தைச்சுற்றி ஒரு முற்றுகைப்போரை நடத்தி, அமெரிக்கக்கொடியை எரிச்சு, தெருவில நிண்டு அட்டகாசம் பண்ணி, நிண்டால் நாங்கள் ஒண்டாத்தான் நிற்பம். வீழ்ந்தாலும் நாங்கள் ஒண்டாத்தான் விழுவம் எண்டமாதிரி அரசாங்கத்தின்ரை அடிப்பக்கத்தில குந்தீடுவார்.

இதுபோலத்தான், ரணிலும் சரத் பொன்சேகாவும் ஒண்டு திரண்டிடுவினம்.

இதெல்லாம் ஏனெண்டால், இலங்கையை ஆரிட்டையும் விட்டுக்குடுக்க மாட்டம் எண்ட ஒரு எண்ணத்தாலதான் வந்தது.

இலங்கையை கண்டவன் நிண்டவன் எல்லாம் தங்கட காலுக்குள்ளையும் கவட்டுக்குள்ளயும் கண்டபாட்டுக்குப் போட்டுழக்கினால்... அதின்ரை பாதிப்பு இலங்கைக்கு – இலங்கையர்களுக்குத்தான் எண்டது இவங்களுக்கு நல்லாய் விளங்கும்.

அதுதான் உண்மையும் கூட.

ஆட்டோட உள்ளதுதான் குட்டிக்கும்.

ஆனால், எங்கட (தமிழ்) ஆக்களுக்கு இதொண்டும் விளங்காது.

அவையைப் பொறுத்தவரையில அவை தாங்கள் இலங்கையரே இல்லை எண்ட மாதிரித்தான் சிந்திச்சுக் கொண்டிருக்கினம்.

அதாலதான் அவை எதுக்கெடுத்தாலும் எதிரும் புதிருமாகக் கதைச்சுக்கொண்டிருக்கிறதும் கண்டதுக்கும் எதிர்ப்புக்காட்டிக் கொண்டிருக்கிறதும்.

இதால தங்களுக்குள்ளயும் அடிபட்டு ஆளுக்கொரு போக்கு. தலைக்கொரு நியாயம் எண்டு பிச்சல், பிடுங்கலாக இருக்கினம்.

இதாலதான் இண்டு வரையிலயும் ஒரு முடிவுக்கும் ஒருதரும் வாறதுமில்லை. ஒரு தீர்மானத்தை ஒண்டா நிண்டு ஆதரிக்கிறதும் இல்லை.

வெளியாட்களைச் சந்திச்சாலும் ஒண்டா நிண்டு சந்திக்கிறதோ பேசிறதோ கிடையாது.

உள்ளுக்குள்ள – இலங்கைக்குள்ள பேசிறது, தீர்மானம் எடுக்கிறது எண்டாலும் ஒண்டா நிக்கிறதில்லை.

இதைத்தான் எல்லாரும் தங்களுக்கான வாய்ப்பாக எடுத்துக்கொண்டு தமிழாக்களை வெட்டிப்பயன்படுத்திறாங்கள்.

மற்றவங்களுக்குப் போய் சேவகம் செய்யிற இந்தத் தலைவர்களெல்லாம் தங்களுக்குள்ள ஒண்டு கூடி, ஒருமித்த முடிவை எடுத்து ஒரு தீர்வை எட்டிறதுக்கு ஒரு நாளும் நினைக்கிறதில்லை.

ஆருக்கும் அடிமையாக இருக்கத் தயார். தங்களுக்குள்ள நட்பாக, அன்பாக இருக்கத் தயாரில்ல.

என்ன மாதிரியான ஒரு சனமப்பா? எப்பியான ஒரு கூட்டமப்பா நாங்கள்?

எங்களுக்கு நாட்டுப்பற்றும் கிடையாது. இனப்பற்றும் கிடையாது. ஒரு மண்ணும் கிடையாது.

மற்றவையள் தங்களுக்குள்ள அடிபட்டு, வேறுபட்டுக் குத்துப்பட்டாலும் பொறுத்த சந்தர்ப்பங்களில ஒண்டா நிற்பாங்கள்.

பாருங்கோ, இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்கள் எண்டு அமெரிக்கக்காரன் சொன்னால் அதை எந்தச் சிங்களத்தரப்பாவது ஏற்றதா?

இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடைதான் வருது எண்டு வைச்சுக் கொள்ளுங்கோ... அதை எந்தச் சிங்களக்கட்சியாவது ஏற்றுக்கொள்ளுமோ எண்டு சொல்லுங்கோ பாப்பம்?

இதுதான் நாட்டை நேசிக்கிறது எண்டிறது. இதுதான் தேச பக்தியும் தேசிய உணர்வும் எண்டு சொல்லிறது.

இப்ப சீனா இலங்கையைத் தன்ரை பிடியுக்குள்ள கொண்டு வரப்பாக்குது... அமெரிக்காவுக்குத் தண்ணி காட்டிறதுக்காகச் சீனாவை மடியுக்குள்ள போடுறாங்களே தவிர, சீனாவின்ரை பிடியுக்குள்ள ஒரு நாளும் கொழும்பு போகாது.

ஆனால், நாங்கள்தான் அந்தா விழுகுது... இந்த சரியுது எண்டு கொழும்பு அரசியல் தலைமைகளுக்கு எப்பவும் நேர்த்தி வைச்சுக்கொண்டிருக்கிறம்...

காகம் திட்டி ஒரு நாளும் மாடு சாவதில்லை.

நற்செயல் மேலானது, அதனிலும் மேலானது நல்லெண்ணம்.
- சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இன்னும் எதற்காகக் காத்துள்ளோம்...

மார்ச் மாதத்தில், மே மாதத்தில், நவம்பர் மாதத்தில் எல்லாம் தமிழ் ஊடகங்களைப் பார்த்தால் நடுக்கமாக இருக்கிறது. இலங்கை அரசுடன் மீண்டும் போரிட்டு அதை வீழ்த்துவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை என்றே எண்ண வைக்கின்றன செய்திகள்.

இதுதான் உண்மை நிலையா? இன்னுமொரு முறை போர் வெடித்தால் வெற்றி நமக்குத்தானா? இலங்கை அரசை எதிரி என்ற நிலையிலிருந்து மாற்றவே முடியாதா? அல்லது,

இந்த பூமியிலேயே நியாய அநியாயங்களை விளங்கிக் கொள்ளாத ஒரு இனம் உண்டென்றால் அது சிங்கள இனம் தான். பேசி இணக்கத்திற்கு கொண்டுவரக்கூடிய இனமல்ல அது. துரதிர்ஷ்டவசமாக சிங்களவர்கள் 75 வீதமாகவும் நாம் 13 வீதமும்தான் இருக்கிறோம். அதனால் போரிட்டு வெற்றி பெறுதலும் சாத்தியமில்லை. எனவே, அவர்களோடு வாழவே முடியாது என்பதை உலகிற்கு உரத்துச் சொல்லிவிட்டு, நாம் அனைவருமே எதிர்ப்பைக் காட்டி மடிவதுதான் தமிழர் பெருமையைக் காத்துக் கொள்வதற்கு இருக்கும் ஒரே வழியா?

இப்படித்தான் தமிழ் ஊடகச் செய்திகள் நமக்கு உணர்த்துகின்றன. "எமக்கானதல்ல இந்நாடு, அரசின் நடவடிக்கைகளை அதையே உணர்த்துகின்றன" என்று முழங்குகிறது ஒரு செய்தி. "நினைவேந்தலுக்கான தடை பிரிவினைக்கே பங்களிக்கும்" என்று தமிழர்கள் இனிப் போகவேண்டிய பாதையைச் சுட்டுகிறது இன்னொரு செய்தி.

"கொன்று குவித்துவிட்டு அங்கே கொண்டாடுகிறார்கள்; இங்கே தமிழர்கள் திண்டாடுகிறார்கள்; இந்த அரசுடன் என்ன பேச்சு?" என்ற அடுத்த செய்தியை வாசிக்கும்போது, இதற்கு மேலும் பொறுமையாக இருந்தால் நாம் அசல் தமிழ் வித்தாக இருக்க முடியாது என்பது விளங்கி நம் நாடி நரம்புகள் தசைகள் எல்லாம் அதிர்ந்து வெடிப்பதுபோல் துடிப்பதை உணர்கிறோம்.

இன்னும் எதற்காகக் காத்துள்ளோம்... சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து எழுந்து நேரே களத்திற்குப் போய்விட வேண்டியதுதான் என்ற முடிவிற்கே ஒவ்வொருவரும் வரவேண்டியிருக்கிறது.

2009க்கு முந்திய முப்பது வருடங்களில் நாம் சரிவரப் போராடவில்லை... இனியொரு போரைச் சரிவரச் செய்து தனி நாட்டை அடைந்துவிட முயலலாம்... முடியாவிட்டால் எல்லோருமாக ஒத்தபடி வீரமரணமடைந்துவிட வேண்டியதுதான்.....

இதை எழுதும்போதே கைநடுங்குகிறது. இந்த சூழ்நிலையில் வேறு மாற்று யோசனைகளே இல்லையா? தொடர்ந்து போரிடுவதையும் எதிர்த்துக் கொண்டிருப்பதையும் தவிர தமிழர்களுக்கு எந்தக் காலத்திலும் வேறு வழி இருந்ததில்லை; இனியும் இருக்கப் போவதில்லை. அதுதானா நம் நிலைமை- ரோசம்-வீரம்-தமிழ்ப் பெருமை- - -?

ஊடக எழுத்துக்கள் பேச்சுக்கள் வாயிலாக இங்கே இத்தகைய சூழலைக் கட்டமைப்பதன் மூலம் பகைமறப்பும், நல்லிணக்கமும் உருவாக முடியாமல் தடுத்துக் கொண்டிருக்கிறோம்... பொறுங்கள், இதைச் சொன்னாலே அவர் நிச்சயம் துரோகிதானா?

ஊடக உருவேற்றுதல்களை நிறுத்துவதும், பகைவளர்ப்பின் பலாபலன்கள் பற்றி மக்களை யோசிக்க விடுவதும், நமது மக்கள் நன்றாக வாழவேண்டுமானால் நாம் காண்பிக்க வேண்டிய விவேகம் எத்தகையது என்பதையெல்லாம் நிதானித்துக் கொள்ளாவிட்டால்....

விடுங்கள், எதற்கு அந்தச் சிந்தனை சுமையெல்லாம்?.... நினைவேந்தலைத் தடுத்தால் நித்திரையிலும் அவனைச் சும்மா விடேன் என்று கண்களை உருட்டி எச்சரித்தபடியே போய்க் கொண்டிருக்க வேண்டியதுதான்!

- ஆசிரியர்

# மோடியின் இந்துதத்துவக்கொள்கை இலங்கைக்கு விமோசனம் தராது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சீற்றம்

(கொழும்பு)

நரேந்திர மோடியின் வெற்றி இலங்கைக்கு பெரும் பாதகமாகவே அமையும். அத்துடன் இலங்கைக்கு எதிரான மேற்குலக நாடுகளின் அழுத்தங்கள் இனி மோடியூடாகவே வருமென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் கே.எம். வசந்த பண்டார தெரிவித்தார். இந்திய பொதுத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சித் தலைவர் நரேந்திர மோடி வெற்றியீட்டியுள்ளதுடன் இந்தியாவின் பிரதமராக ஆட்சிபீடமேறவுள்ளார்.

இது தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் கே.எம்.வசந்த பண்டாரவை தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய பொதுத்தேர்தலில், வெற்றியீட்டிய இந்துத்துவ இனவாதக் கட்சியான பாரதிய ஜனதா கட்சித் தலைவர் நரேந்திர மோடி, காங்கிரஸ் பிரதமர் மன்மோகன்சிங்கைவிட மிகவும் அதிகாரம் படைத்தவராகத் திகழ்வார். அத்துடன் சீன அரசுக்கு எதிரான அமெரிக்காவின் செயற்திட்டங்கள் நரேந்திர மோடியின் ஆட்சியில் நிறைவேற்றப்படுவதுடன், இந்தியா முன்பைவிட மிகப் பலமான வல்லரசாக தெற்காசியாவில் மட்டுமல்லாது ஆசியாவிலும் திகழும்.

அத்துடன் அமெரிக்காவினூடாக இந்தியாவுக்குக் கிடைக்கும் அதீத பலம் இலங்கைக்கு எதிரான மேற்குலக நாடுகளின் அழுத்தத்திற்கு போஷாக்களிக்கக்கூடும். அதாவது இலங்கைக்கெதிரான மேற்குலக நாடுகளின் அழுத்தங்கள் இனிமேல் பலமான நரேந்திர மோடியின் அரசாங்கத்தினூடாகவே வரக்கூடும்.

அதேவேளை நரேந்திர மோடி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழருக்கான சம அதிகார பலம் குறித்து ஆதரவான கருத்துகளை தெரிவித்திருப்பதால் நரேந்திர மோடியின் அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கத்தைவிட இலங்கையின் 13 ஆம் திருத்தச் சட்டத்தில் அதிக கவனம் செலுத்துவதுடன், 13 ஆம் திருத்தத்தில் காணப்படும் அதிகாரங்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முயற்சிக்கும்.

அத்துடன் நரேந்திர மோடியின் இந்துதத்துவக் கொள்கையும் இனவாதப் போக்கும் இலங்கையின் அரசியல் விவகாரங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக இலங்கையில் பிரிவினைவாத நடவடிக்கைக்கு நரேந்திர மோடியின் அரசாங்கம் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊக்கமளிக்கும்.

அதேவேளை ஜெயலலிதாவின் கட்சி பொதுத்தேர்தலில் தனித்துப் போட்டியிட்டபோதும் அக்கட்சி தனது "அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக நரேந்திர மோடியுடன் இணைந்து செயற்படும். இதனூடாக இலங்கைக்கு எதிரான தமிழ்நாட்டின் செயற்றிட்டங்கள் நரேந்திர மோடியின் ஆதரவுடனேயே நிறைவேற்றப்படும். நரேந்திர மோடியின் வெற்றி இலங்கைக்கு பெரும் பாதகமாகவே அமையுமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்றார்.

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் மீண்டும் உயிர்பெறவேண்டும்

## மோடியிடம் கோருவது விமோசனம்தரும் என்கிறார் மனோகணேசன்

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுங்கள், 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல் செய்யுங்கள் தமிழ் பயங்கரவாதத்தை அழிக்கிறோம் என்ற போர்வையில் சீன - பாகிஸ்தானிய ஊடுருவல்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். இந்த மூன்று நிலைப்பாடுகளுக்கும் இலங்கை அரசை உடன்படச் செய்யுங்கள் என்று, இந்தியவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியை நோக்கி, இலங்கையில் இருந்து ஒரே குரலில், தமிழ்த்தலைமைகள் சொல்ல வேண்டும். இதற்கு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் இடையூறு விளைவிக்கக்கூடாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

முன்னணியின் வாரந்த அரசியல் ஆய்வுக் கூட்டம் நேற்று கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

பாரதிய ஜனதா கட்சியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மையுடன டெல்லியில் ஆட்சியை அமைக்கின்றது. தமிழகத்தில் முதல்வர் ஜெயலலிதா அபார வெற்றியடைந்துள்ளார். எனினும் உடனடியாக அ.தி.மு.க.வின் ஆதரவு மோடி அரசுக்கு தேவைப்படாது. தமிழகத்தில் வெற்றி பெற்றுள்ள பாமகவின் அன்புமணி, பா.ஜ.க.வின் இராதாகிருஷ்ணன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் அமைச்சரவையில் இடம்பெறலாம் என்பது ஒரு ஆறுதலாக இருக்கலாம்.

புதிய மோடி அரசுடனான உறவை வலுப்படுத்தும் முயற்சிகளை, இலங்கை அரசு உடனடியாக தொடங்கிவிட்டது. உண்மையில்,நடைபெற்ற தேர்தலுக்கு முன்னரே இம்முயற்சிகள் ஆரம்பமாகின. இது வரவேற்கக் கூடியதுதான். அண்டை நாடுகள் இரண்டும் நல்லுறவு கொள்வது இரு நாட்டு மக்களுக்கும் நன்மை தரக்ககூடியதாகும். ஆனால், இலங்கை தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய அரசுடன் ஏற்படுத்திக்கொண்ட கடப்பாடுகளை தவிர்த்துவிட்டு, தனது இனவாத அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் முகமாக மாத்திரம் இந்திய உறவை பயன்படுத்த இலங்கை அரசு முயற்சிக்கிறது. இதை இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்நிலையில், நரேந்திர மோடி நிர்வாகத்துடன் வறட்டு பிடிவாதம் பிடித்து அல்லது வறட்டு சமிக்ஞையை காட்டி, இலங்கை அரசின் கபட நோக்கத்தை சுலபமாக்கி, அதன் மூலம் இப்போது இருப்பதையும் இழக்கச்செய்யும் முனைப்புகளில் தவறுதலாகக்கூட தமிழர் தரப்புகள் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளக் கூடாது. இவ்விடயத்தில் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தன்னிச்சையான இடையூறுகளை விளைவிக்கக் கூடாது. இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இருநாட்டு ஒப்பந்தத்தை மையப்புள்ளியாகக்கொண்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணும்படி புதிய நரேந்திர மோடி அரசாங்கத்தை நாம் வலியுறுத்த வேண்டும். இலங்கைக்கு வந்து சென்ற அப்போதைய இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எதிர்கால அமைச்சர் சுஷ்மா சுவராஜடனான பேச்சுவார்த்தையின் போது, அவர் 13 ஆம் திருத்தத்தை மையப்புள்ளியாக கருதியதை நான் அவதானித்தேன் என்றும் அவர் தெரிவித்தார்.

### ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த போட்டியிட நியாயம் இல்லை

#### கணை தொடுக்கிறது ஜே.வி.பி.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் மீண்டும் வேட்பாளராக போட்டியிடும் தார்மீக உரிமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடையாது என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மூன்றாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 18ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு தெளிவான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை.

இதன் காரணமாக 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றத் தேவையான வாக்குகளை, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல பரிசுகளையும் சலுகைகளையும் வழங்கியே பெற்றுக்கொண்டது என்றும் அவர் தெரிவித்தார்.



# தமிழ் மக்களுடைய நலனுக்கு குறுக்கே நிற்கிறது கூட்டமைப்பு

சங்கர சிவன்

**நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் தீர்வு காண முடியுமா என்பதை முயற்சித்துப் பார்ப்பதற்குக் கூட கூட்டமைப்பு விரும்பவில்லையென்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை அவர்கள் விரும்பவில்லை என்பதே அர்த்தம். தங்கள் அரசியல் பதவிகளைத் தக்க வைப்பதற்காக ஏதேனுமொரு பிரச்சினையைத் தூக்கிப்பிடிக்க வேண்டும். இனப்பிரச்சினை தீராமல் இராணுவப் பிரசன்னம் நீங்காது என்பது தெரிந்திருந்தும் அதையே தூக்கிப் பிடித்து மக்களை உசுப்பேற்றுவதன் மூலம் தங்கள் அரசியல் இருப்பை உறுதி செய்து கொள்கின்றார்கள். அரசியல் தீர்வைத் தவிர்ப்பதுமாகின்றது. பதவிகளைக் காப்பாற்றுவதுமாகின்றது.**

தெரிவுக் குழுவின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் தவறுமேயானால் அரசிலிருந்து வெளியேறுவது பற்றிப் பரிசீலனை செய்யத் தயார் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தெரிவுக் குழுவுக்கு வர வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த அறிவிப்புக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் வழமை போல விதண்டாவாதப் பதில் அளித்திருக்கிறார்.

இனப்பிரச்சினையின் தீர்வு முயற்சிக்கு இன்றைய நிலையில் தெரிவுக் குழுவே சாத்தியமான வழி என்பதையும் அதில் பங்குபற்ற வேண்டிய தார்மீகக் கடப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு என்பதையும் வலியுறுத்தும் வகையிலேயே அமைச்சரின் அறிக்கை இருந்தது. இதற்குப் பதிலளித்த சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்ப் பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் மற்றும் காணி அபகரிப்பு என்பவற்றை முன்னிலைப் படுத்தி அமைச்சர் டக்ளஸ் அரசிலிருந்து வெளியேறுவாரா என்று கேள்வி கேட்கிறார். இந்தக் கேள்வி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முகமூடியைக் கிழித்து நிஜ முகத்தைக் காட்டுகின்றது.

சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்ட இராணுவப் பிரசன்னம், காணி அபகரிப்பு என்பன இனப்பிரச்சினை தீராதிருப்பதன் விளைவுகள் என்பதைப் பல தடவைகள் சுட்டிக் காட்டியிருக்கின்றோம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் பட்சத்தில் அல்லது தீர்வை நோக்கிய நகர்வு இடம்பெறும் பட்சத்தில் இப்பிரச்சினைகள் மெல்ல மெல்ல மறையக்கூடியவை. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் தீர்வைக் காண முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியாகக் கூறுகின்றார். இது பற்றிப் பின்னர் விரிவாகப் பார்ப்போம். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் தீர்வு காண முடியுமா என்பதை முயற்சித்துப் பார்ப்பதற்குக் கூட கூட்டமைப்பு விரும்பவில்லையென்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை அவர்கள் விரும்பவில்லை என்பதே அர்த்தம். தெரிவுக் குழுவுக்கூடாக ஏதாவதொரு தீர்வு நடைமுறைக்கு வருமேயானால் இவர்கள் கூறும் மற்றைய பிரச்சினைகள் ஓரளவுக்கு மறைவதற்கு இடமுண்டு. இனப்பிரச்சினைக்குத் தீர்வு வருவதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் விரும்பாத நிலையில் தங்கள் அரசியல் பதவிகளைத் தக்க வைப்பதற்காக ஏதேனுமொரு பிரச்சினையைத் தூக்கிப்பிடிக்க வேண்டும். இனப்பிரச்சினை தீராமல் இராணுவப் பிரசன்னம் நீங்காது என்பது தெரிந்திருந்தும் அதையே தூக்கிப் பிடித்து மக்களை உசுப்பேற்றுவதன் மூலம் தங்கள் அரசியல் இருப்பை உறுதி செய்து கொள்கின்றார்கள். அரசியல் தீர்வைத் தவிர்ப்பதுமாகின்றது. பதவிகளைக் காப்பாற்றுவதுமாகின்றது. தெரிவுக் குழுவைக் கூட்டமைப்பு நிராகரிப்பதற்கு இது தான் உண்மைக் காரணம் என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தெரிவுக் குழு தொடர்பாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் பல மாயைகளை வளர்த்துத் தமிழ் மக்களை திசை திரும்புகின்றார்கள். அரசாங்க ஆதரவாளர்களே தெரிவுக் குழுவில் கூடுதலாக இருப்பார்கள் என்பதால் அதன் மூலம் எந்தத் தீர்வையும் அடைய முடியாது என்பது ஒரு மாயை. நாடாளுமன்றத்திலும் அரசாங்க ஆதரவாளர்களே கூடுதலாக இருந்தால் தீர்வு சாத்தியமில்லை என்பது உங்கள் நிலைப்பாடென்றால் நாடாளுமன்றத்துக்கு ஏன் போகின்றீர்கள்? சுளை சுளையாகச் சம்பளமும் சொகுசு வசதிகளும் கிடைக்கும் என்பதற்காகவா? அரசாங்க ஆதரவாளர்கள் மத்தியிலும் உரிமையை வலியுறுத்த வேண்டும் என்று கூறுவீர்களேயானால் தெரிவுக் குழுவிலும் அதைச் செய்ய வேண்டுமல்லவா?

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி எட்டப்படும் உடன்பாட்டைத் தெரிவுக் குழுவில் வைக்கவேண்டும் என்று இன்னொரு மாயை. தெரிவுக் குழுவில் அரசாங்க ஆதரவாளர்கள் கூடுதலாக இருப்பதால் அரசியல் தீர்வு பற்றி எந்த உடன்பாடும் சாத்தியமில்லை என்றும் சொல்கின்றார்கள். அதே நேரம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக உடன்பாட்டுக்கு வர முடியும் என்றும் சொல்கின்றார்கள். இதே அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தானே தெரிவுக் குழுவிலும் உள்ளனர். முரண்பாடாக இருக்கின்றதே. மேலும் புறச்சூழல் சரியாக அமையும் வரை அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தை இல்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் அடிக்கடி ஊடகங்களுக்குச் சொல்கிறார். அதாவது, இராணுவப் பிரசன்னம் நீங்கும் வரை பேச்சுவார்த்தை இல்லையாம். அப்படியானால் இராணுவப் பிரசன்னத்துக்கு மத்தியில் எப்படி அரசாங்கத்துடன் பேசி அரசியல் தீர்வு தொடர்பாக உடன்பாட்டுக்கு வர முடியும்? யாரைப் பேய்க்காட்டுவதற்காக இந்தக் கதையெல்லாம்?

தெரிவுக் குழுவின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றும் சொல்கின்றார்கள். முயற்சித்துப் பார்க்காமல் எப்படி இவர்கள் இந்த முடிவுக்கு வரலாம்? கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுவது போல் தெரிவுக் குழுவில் பேரினவாதிகள் மாத்திரம் அங்கம் வகிக்கவில்லை. தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை அங்கீகரிப்பவர்களும் அங்கம் வகிக்கின்றார்கள். முஸ்லிம் காங்கிரஸையும் தெரிவுக் குழுவில் இணைப்பதற்கான முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப் படுகின்றன. ஆறு மாத காலத்துக்குள் தெரிவுக் குழு அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அரசாங்கம் காலக்கெடு விதித்திருக்கின்றது. எனவே, தெரிவுக் குழு வெறும் காலவிரயமாக இருக்கப்போவதில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒரு நாளிலோ அல்லது ஒரு மாதத்திலோ அடையக்கூடியதல்ல. கட்டங்கட்டமான வளர்ச்சிக்கூடாகவே முழுமையான அரசியல் தீர்வை அடைய முடியும் என்பதே சமகால யதார்த்தம். பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட தீர்வு இந்த வளர்ச்சி நடைமுறையில் முன்னேற்றகரமான ஒரு கட்டமாக அமையும். நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் மூலம் இதை அடையலாம் என்ற நம்பிக்கை அரசியல் தீர்வில் அக்கறை உள்ளவர்களினால் வெளிப்படுத்தப்படுகின்றது.

அறுபது வருடங்களுக்கு மேலாக இனப்பிரச்சினை தீராமலிருக்கின்றது. ஒரே பாரம்பரியத்தைக் கொண்ட தலைவர்களே இவ்வளவு காலமும் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கியவர்கள். இவ்வளவு காலமும் தங்களால் முடியாததை அடைவதற்கு ஏன் ஆறு மாதங்கள் முயற்சிக்கக்கூடாது? தெரிவுக் குழுவில் பங்குபற்றி ஆறு மாதங்கள் முயற்சித்துப் பார்ப்பதால் தமிழ் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. இப்போது அனுபவிக்கும் எந்த உரிமையையும் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதன் மூலம் தமிழ் மக்கள் இழக்கப்போவதில்லை. அவ்வாறிருக்க, கூட்டமைப்பினர் தெரிவுக் குழுவை நிராகரிப்பதை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் கைநழுவவிட்ட தமிழ்த் தலைவர்கள் எத்தனையோ சந்தர்ப்பங்களைத் தவற விட்டுவிட்டோம் என்று பிற்காலத்தில் புலம்பியதை நாம் அறிவோம். தெரிவுக் குழு விடயத்தில் அந்தக் கதை தொடரக்கூடாது.

எத்தனையோ அரசியல் தலைவர்களும், ஆய்வாளர்களும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் தெரிவுக் குழுவை நிராகரிக்கும் முடிவை மாற்றுவதற்குக் கூட்டமைப்பு தயாரில்லையென்றால் அதற்கு விசேடமான ஒரு காரணம் இருக்கவேண்டும். அப்படியொரு காரணம் இருக்கின்றது. அது தமிழ் மக்களின் நலன் சார்ந்த காரணமல்ல. தமிழ் மக்கள் அதைப் புரிந்துகொண்டு தங்கள் அரசியல் பாதையைத் தீர்மானிக்க வேண்டும்.

இனப்பிரச்சின்னக்கு அரசியல் தீர்வு கிடைப்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை. அதனாலேயே தீர்வுத் திட்டமும் அதனிடம் இல்லை. தெரிவுக் குழுவுக்குப்போனால் அரசியல் தீர்வுக்கான ஆலோசனையை அங்கு முன்வைக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விருப்பமோ அதற்கான தீர்வுத் திட்டமோ இல்லாதவர்கள் தெரிவுக் குழுவுக்குப் போய் எப்படி அரசியல் தீர்வுக்கான ஆலோசனையை முன்வைப்பது? அரசியல் தீர்வை நாங்கள் விரும்பாததாலேயே தெரிவுக் குழுவுக்குச் செல்லவில்லை என்று தமிழ் மக்களுக்கு உண்மையைக் கூறினால் இவர்களின் அரசியல் அஸ்தமித்துவிடும். அதனால் முன்னுக்குப் பின் முரணானவையும், பொருத்தமற்றவையுமான நொண்டிச் சாட்டுக்கள் கூறித் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றார்கள்.



**அரசாங்க ஆதரவாளர்களே தெரிவுக் குழுவில் கூடுதலாக இருப்பார்கள் என்பதால் அதன் மூலம் எந்தத் தீர்வையும் அடைய முடியாது என்கின்றனர். அரசாங்க ஆதரவாளர்களே கூடுதலாக இருந்தால் தீர்வு சாத்தியமில்லை என்பது உங்கள் நிலைப்பாடென்றால் நாடாளுமன்றத்துக்கு ஏன் போகின்றீர்கள்? சுளை சுளையாகச் சம்பளமும் சொகுசு வசதிகளும் கிடைக்கும் என்பதற்காகவா?**

கூட்டமைப்புத் தலைவர்கள் ஏன் அரசியல் தீர்வை விரும்பவில்லை என்ற கேள்வி அடுத்து எழுகின்றது. புலிசார்புப் புலம் பெயர் அமைப்புக்களின் செல்வாக்கு வட்டத்துக்குள் கூட்டமைப்பு முழுமையாக வீழ்ந்து விட்டது. அரசியல் உறவிலும் பார்க்கப் பொருளாதார உறவே இதற்குப் பிரதான காரணம். இந்தப் புலம் பெயர் அமைப்புகளிடமிருந்து கூட்டமைப்புக்குப் பெருமளவு நிதி கிடைப்பது இரகசியமல்ல. கூட்டமைப்புத் தலைவர்களின் வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கும் இந்தப் புலம் பெயர் அமைப்புகள் கைகொடுக்கின்றன. இந்த நிலையில் புலம்பெயர் அமைப்புகளின் கட்டளையைக் கூட்டமைப்பினால் மீற முடியாது. எப்போதாவது தனிநாடு அமையும் என்ற கற்பனையில் மிதந்து கொண்டிருக்கும் புலம் பெயர் அமைப்புகள் அரசியல் தீர்வுக்குச் சாதகமான முறையில் கூட்டமைப்பு செயற்படுவதை விரும்பவில்லை. புலம் பெயர் அமைப்புகளின் விருப்பத்தைக் கூட்டமைப்பு நிறைவேற்றுகின்றது. புலம்பெயர் அமைப்புகளைத் திருப்திப்படுத்துவதற்காகத் தமிழ் மக்களின் நலனுக்குக் குறுக்கே நிற்கின்றது.

கூட்டமைப்புத் தலைவர்கள் இதை மறுப்பார்களேயானால், தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து உடனடியாக அரசியல் தீர்வுக்காகச் செயற்படுவார்களா?

# சீன இராணுவ அதிகாரி கோத்தாவுடன் சந்திப்பு




(கொழும்பு)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய இராணுவ ஆணைக் குழுவின் பிரதித் தலைவரும் இராணுவ ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஜெனரல் சூ கிலியாக் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் சீனா மற்றும் இலங்கைக்கு இடையிலான நீண்ட கால வரலாற்று உறவுகளை வலுப்படுத்துவதுடன் இரு நாடுகளுக்கும் பொதுவான எதிர்கால சவால்களை எதிர்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இச்சந்திப்பை நினைவு கூரும் முகமாக இரு தரப்புகளுக்கும் இடையே நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

# ஊவாவில் தேர்தல் காற்று

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தலின் பின் நாடளாவிய ரீதியிலான தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தினமின சிங்களப் பத்திரிகைக்கு அளித்துள்ள விசேட நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த நேர்காணலின் போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் தற்போதைய நிலையில் அரசாங்கம் எந்தத் தேர்தலை எதிர்கொண்டாலும் வெற்றிபெறும் நிலையில் இருக்கிறது.

ஆனால் எதிர்க்கட்சியினருக்கோ எந்தத் தேர்தலை எதிர்கொண்டாலும் வெற்றியே கிடைப்பதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தேர்தல்கள் உரிய காலத்தில் நடாத்தப்படவில்லை. ஆனால் எங்கள் அரசாங்கத்தில் எல்லாத் தேர்தல்களும் உரிய காலத்துக்கு முன்னரே நடாத்தப்படுகின்றன. ஏனெனில் அரசாங்கம் அந்தளவுகளு ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலின்போது எதிர்க் கட்சிகள் என்னதான் பொது வேட்பாளரை நிறுத்தினாலும் அவர்களால் வெற்றி பெற முடியாது. ஏனெனில் ஜனாதிபதி அவர்கள் மக்களின் வேட்பாளர். அவரை தோற்கடிக்க எந்தவொரு பொது வேட்பாளருக்கும் முடியாது என்றும் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

# யுத்த வெற்றிவிழா விமல் தனி வழி

(கொழும்பு)



வீடமைப்பு அமைச்சரும், ஜே.என்.பி.யின் தலைவருமான விமல் வீரவன்ச யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் தனியாக ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. யுத்த வெற்றிக் கொண்டாட்டம் தொடர்பான தேசிய நிகழ்வுகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை யில் மாத்தறையில் நடைபெறவுள்ளன.

விமல் வீரவன்சவின் ஜே.என்.பி. கட்சி கொழும்பில் தனியாக யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடவுள்ளது. "தேசிய வீரர்கள் கேட்கும் நாடு" என்ற தொனிப் பொருளில் சவ்சிறிபாய கேட்போர் கூடத்தில் விமல் வீரவன்சவின் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்கள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற வுள்ளது. இந்த நிகழ்வில் அமைச்சர் விமல் வீரவன்ச விசேட உரையாற்ற வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியினால் நடாத்தப்படும் முக்கிய நிகழ்வுகளில் விமல் வீரவன்ச பங்கேற்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மரணித்தவர்களுக்கு மதக்கிரியை தடை எதுவும் கிடையாது

## வணிக சூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தத்தில் உயிரிழந்த தனது உறவினர் ஒருவரை நினைவு கூர்ந்து சமய அனுஷ்டானங்களில் ஈடுபடுவதில் எந்தவித தடையும் கிடையாது. மாறாக புலிக் கொடியை வைத்துக் கொண்டு கூட்டமாக நினைவு கூருவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பேச்சாளர், பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் கொடிகளை பயன்படுத்தி நினைவு கூரும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சட்டவிரோத செயலாகும். அவ்வாறு செயற்படுபவர்களுக்கு எதிராக பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் கடுமையான சட்ட நடவடிக்கையை எடுப்பார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பிரிகேடியர் மேலும் விளக்கமளிக்கையில்:-

பயங்கரவாதம் எந்தவிதத்தில் வந்தாலும் அது பயங்கரவாதம் தான். அதற்கு எந்த வகையிலும் அனுமதியளிக்க முடியாது. யுத்த காலத்தில் உயிரிழந்த அனைவரும் ஒரே நாளில் உயிரிழந்தவர்கள் அலல.

எனினும் சிலர் பிரிவினை வாதத்தை ஏற்படுத்தும் நோக்கில் 18 ஆம் திகதி அனுஷ்டிக்க முயற்சிக்கின்றனர்.

அதேபோன்று 18 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற வெற்றி விழா அணிவகுப்பானது இராணுவ வெற்றிக்கான கொண்டாட்டம் அல்ல, ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை வெற்றி கொண்டமைக்கான கொண்டாட்டமும் அலல.

மாறாக வடக்கு, கிழக்கு உட்பட இந்த நாட்டில் அச்சத்திற்கு மததியில் வாழ்கின்ற மக்களுககு கிடைத்த வெற்றிக் கொண்டாட்டமாகும். இதனை வைத்துக் கொண்டு அரசியல் இலாபத்தை கருத்திற்கொண்டு, தமிழ் மக்கள் மத்தியில் முரண்பாடுகளை தோற்றுவிக்க சிலர் முயற்சிக்கின்றனர்."

வருடாந்தம் இடம்பெற்று வரும வெற்றி விழா அணிவகுப்புக்கான அழைப்பிதழ்கள் பாதுகாப்புச் செயலாளரினாலேயே வழங்கப்படுகிறது.

இது அரசியல், கட்சி பேதங்களுக்கு அப்பால் சகல அரசியல் பிரமுகர்களுக்கும் வழங்கப்படுகிறது. அழைப்பு விடுப்பது எமது பொறுப்பு. அதில் கலந்து கொள்வதும். கலந்து கொள்ளாததும் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட விருப்பமாகும்.

மாறாக இதில் எந்த பலாத்காரமும் கிடையாது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதை விரும்பாதவர்களே தமது குறுகிய அரசியல் இலாபம் கருதி முரண்பாடுகளை தோற்று விக்க முயல்கின்றனர் என்றார்.

# தவறிழைக்கும் மாணவர்களை கையாளுவது எப்படி?

## ஆசிரியர் சங்கத்துக்கு ஐயவினா

(கொழும்பு)

தவறிழைக்கும் மாணவர்களை ஆசிரியர்கள் கையாள வேண்டிய வழிமுறைகள் அடங்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடுமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், "ஆசிரியர்களின் கவனயீனம் காரணமாக இவ்வருடத்தில் மாத்திரம் இரு மாணவர்களின் உயிர்கள் பறிபோயுள்ளன.

மேலும் பல மாணவர்கள் மனதளவில் உளைச்சல்களுக்கு உள்ளாகியுள்ளனர்" என்று கூறினார். மாணவர்களை கையாள வேண்டிய வழிமுறைகள் அடங்கிய சுற்றறிக்கையொன்று கடந்த 2005 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட போதிலும் அது தொடர்பில் ஆசிரியர்களுக்கோ அதிபர்களுக்கோ எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்படவில்லை.

மேற்படி சுற்றறிக்கையில், மாணவர்களை கையாள வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை, அவற்றையும் மீறி மாணவர்களை துன்புறுத்தும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்று ஸ்டாலின் கூறினார்.

பாடசாலை மாணவர்கள் செய்யும் தவறுகளை ஆசிரியர்கள் எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பான உரிய தெளிவுப்படுத்தல்கள் வழங்கப்படுமாயின் தலைமயிரை வெட்டுதல், செருப்பு மாலை அணிவித்தல் உள்ளிட்ட மாணவர்களால் தாங்கிக் கொள்ள முடியாத தண்டனைகளை ஆசிரியர்கள் வழங்க மாட்டார்கள் என்று ஜோசப் ஸ்டாலின் மேலும் கூறினார்.

# புலிகள் தலையெடுப்பதை தடுத்துநிறுத்துவது எப்படி?



## சம்பிக்க இன்று கருத்துரை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுப்பதை தடுத்து நிறுத்துவது எப்படி என்ற தொனிப் பொருளில் இன்று கொழும்பில் விசேட கருத்தரங்கு ஒன்று இடம் பெறவுள்ளது.

புலிகளின் சர்வதேச வலையமைப்பு தலைவர்களில் ஒருவராக கருதப்படும் பேரின்பநாயகம் எனப்படும் நெடியவனை கைது செய்யுமாறு கோரி ஜாதிக ஹெல உறுமய கட்சி இன்று நோர்வே தூதரகத்திற்கு எதிரில் போராட்டமொன்றை நடாத்தவுள்ளது.

நெடியவனை இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு வலியுறுத்தி சுதந்திர சதுக்கத்திலிருந்து, நோர்வே தூதரகம் வரையில் ஜாதிக ஹெல உறுமய கட்சி உறுப்பினர்கள் இன்று பேரணியாக செல்லவுள்ளனர்.

நெடியவனை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு கோரி நோர்வே தூதரகத்திடம் மகஜர் ஒன்றையும் கையளிக்க உள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை முன்னிட்டு ஜாதிக ஹெல உறுமய விசேட கருத்தரங்கு ஒன்றை நடாத்த உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீள தலைதூக்குவதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனற தொனிப் பொருளில் இந்த கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இந்த கருத்தரங்களில் அமைச்சர் சம்பிக்க ரணவிக்க விசேட விரிவுரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

# பாரிய சவால்களை முறியடிக்க ஒருங்கிணைந்து செல்கிறோம்

## சங்கரப்பிள்ளைரவி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

2012 முதல் 2020 வரை அனர்த்தத்தை எதிர்கொள்ளும் ஆண்டாக நாம் பிரகடனம் செய்கின்றபோது எதிர்கொள்ளும் பாரிய சவால்களை முறியடிக்க ஒருங்கிணைந்த அடிப்படையில் செல்கிறோம்.

இவ்வாறு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி தெரிவித்தார்.

உலக பூமிதினம் வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட பணிப்பாளர் ச.ரவி மேலும் தெரிவிக்கையில்,

இன்று எமது நாடு பல அனர்த்த நிகழ்வுகளுக்கு ஆளாகின்றன. இதன் மூலம் 'பல உயிரிழப்புக்களும் காயங்களும் ஏற்படுகின்றன.

இதில் இருந்து மீளவென இவ் அனர்த்த முகாமைத்துவ பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே 2020 ஆம் ஆண்டில் இவ் அனர்த்தம் தொடர்பான பூரண பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்காக நாம் முன்னெச்சாக்கை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என்றார். இதில் ஆசியுரையினை வட மாநில இந்து குருமார் ஒன்றிய தலைவர் சிஸ்ரீ.சபா.வாசுதேவ குருக்கள், வண. பிதா செபஸ்ரியன் அன்ரனி ஆகியோர் வழங்கினர்.

வலி.மேற்கு பிரதேச சபையில் நீண்ட காலம் சேவை புரிந்த அலுவலர்களின் வினைத திறன் மிகுசேவையை பாராட்டி வடிவேலு பாரதிக்கு கௌரவ விருது வழங்கி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ச.ரவி கௌரவித்தார்.

இறுதியாக யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வராஜா ரவீந்திரன் தலைமையில் வலி.மேற்கின் நகர அபிவிருத்தியை மையமாக கொண்ட பட்டிமன்றமும் பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது. (92)



தாதியர் தினத்தை முன்னிட்டு யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. நிகழ்வில் மன அழுத்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வும் நடைபெற்றதோடு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பவானந்தராஜா, பிரதிப் பணிப்பாளர், தாதியர் பயிற்சிக் கல்லூரி போதனாசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (48)

# வலுவூட்டல் நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி டெவ்லிங் நிறுவனத்தால் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான வலுவூட்டல் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

கனகபுரம் ஆதவன் முன்பள்ளி வளாகத்தில் வண பிதா லிங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வண பிதா ஞானராஜா கலந்து கொண்டார்.

விசேட தேவை உடைய மாணவர்களின் மன வலுவை மேம்படுத்தும் நோக்கில் முழு நாள் நிகழ்வாக இது நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (90)

# "குறுவட்டு" குறும்படத்துக்கான விருது வழங்கலும் திரையிடலும்

யாழ்ப்பாணத்தில் நடந்துமுடிந்த 48 மணிநேர குறுந்திரைப்பட போட்டியின் விருது வழங்கலும், குறும்படங்கள் திரையிடல் நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை யாழ்.ராஜா திரையரங்கில் நடைபெற்றது. இதில் ராஜேஸ்டோன் அணியினரின் "குறுவட்டு" குறும்படம் சிறந்த குறும்படமாக தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

அணியினரின் "இது" குறும்படம் தெரிவுசெய்யப்பட்டது. அத்துடன் கொடுத்த வசனத்தை சரியாக உபயோகப்படுத்திக் கொண்டமை, கரக்டர், பொருள் ஆகியவற்றை சரியான முறையில் உபயோகித்தமை ஆகியவற்றுக்கான விருதுகளும் இது குறும்படத்துக்கு கிடைத்தது. கூடவே பார்வையாளர் விருதையும் இந்த குறும்படமே பெற்றுக்கொண்டது.

இதேவேளை சிறந்த நடிகை, ஒளிப்பதிவு, எடிட்டிங், பின்னணி இசை, ஒலியமைப்பு, VFX ஆகியவற்றுக்கான விருதுகள் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (48)

# குடமியன் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபைக்குட்பட்ட குடமியன் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கட்டயாப்பு வீதியானது கடந்த 30 வருடங்களாக திருத்தப்படாமல் குண்டும் குழியமாகவுள்ளது.

இந்த வீதியினை குடமியன் நாவற்காடு, மிருசுவில் வடக்கு முதலான மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளை சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துவதாகவும்; இந்தப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருட்களை கொடிகாமம் சந்தைக்கு கொண்டு செல்ல இந்த வீதி மிகவும் முக்கியமாகவுள்ளது.

இவ் வீதியில் மழைகாலங்களில் வெள்ளநீர் குளம்போல காணப்படுவதால் மக்கள் போக்குவரத்து செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே குடமியன் கட்டயாப்பு வீதியினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து திருத்தித் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (130)

# விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பரீட்சை திணைக்களம் இந்து தர்மாசிரியா சான்றிதழ் பரீட்சைக்கான விண்ணப்ப படிவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறி பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெறாத அறநெறி பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி முன்னர் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி யூன் 13 ஆகும் மேலதிக விபரங்களை 0112785230 / 0112177073 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# தொழிலாளர் சங்கக்கூட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட பொற்தொழிலாளர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி இடம் பெறவுள்ளதாக சங்கத்தின் உப தலைவர் மாணிக்கம் ஜெகன் தெரிவித்தார்

வவுனியா பிரதேச செயலாளருடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் அவ் விடயங்களை ஏனைய சங்க உறுப்பினர்களுக்கு எடுத்தியம்பும் வகையில் இக் கூட்டம் இடம் பெறவுள்ளமையினால் அனைத்து சங்க உறுப்பினர்களையும் 25 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு வவுனியா நகர கிராம அபிவிருத்தி சங்க பொது நோக்கு மண்டபத்திற்கு சமூகமளிக்குமாறு கோரியுள்ளார்.

# முரசின் இன்றைய பலன்



(18.05.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் வைகாசி மாதம் 4 ஆம் திகதி.
சதுர்த்தி / சித்தாமிர்தம்.
பூராட நட்சத்திரம் பி.இ. 02.47 வரை. பின் உத்தாரடம்.
இராகு காலம் 04.23 - 05.53 வரை. சுபநேரம் 8.53 -10.23வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

**மேடம்** பலவேலைகளை ஒரு சமயத்தில் எடுத்து எதைச் செய்து முடிப்பது என்று தடுமாற்றம் ஏற்படும். இளைய சகோதரருடன் சிறிய மனத்தாங்கல் ஏற்பட்டு நீங்கும். சுவீப் அதிர்ஷ்டமுண்டு.

**ரிஷபம்** மாதாவின் நீண்டநாள் நோய் குணமடைவதை எண்ணி ஆனந்தமடைதல். பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வியாபார உத்திகளை மாற்ற முயலல்.

**மிதுனம்** வரவேண்டிய நிலுவைகளை வசூலிக்க பகீரதப் பிரயத்தனம் ஏற்படல். யுக்திகளைக் கையாண்டு காரியங்களைக் சாதித்துக் கொள்வீர்கள்.

**கடகம்** தேகபலமும் உளவளமும் யோகாகலை பயிலத்திட்டமிடல். அனுபவம் இல்லாத தொழிலைத் தொடங்குவதின் மூலம் நட்டம் தக்க வைக்கலாம்.

**சிம்மம்** குடும்பஒற்றுமையில் குழப்பங்கள் உருவாக வாய்ப்புள்ளதால பொறுமையைக் கடைப்பிடியுங்கள். புதிதாக பழக முறபடுபவருடன் மிகவும் கவனமாக இருப்பதினால் மோசடி ஏற்படாமை.

**கன்னி** திருமணநிகழ்வில் அடாவடித்தனம் ஏற்பட்டதால் மனப்பாதிப்படைதல். பணப்பற்றாக்குறை ஏற்பட்டதினால் கடன் வாங்கும் நிலை தக்க வைத்தல்.

**துலாம்** சொத்துக்களின் நம்பகத்தன்மையை நன்கு பரிசோ தித்த பின்னரே வாங்குவதைப் பற்றி முடிவெடுங்கள்.

**விருச்சிகம்** வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத்தில் கூடிய கவனஞ்செலுத்தல். தொடுத்த வழக்கு சாதகமான தீர்ப்பினைத் தரும் என்ற நம்பிக்கை பிறத்தல்.

**தனுசு** பழைய கசப்பான சம்பவம் ஒன்று மனதை உறுத்தியதால் நிம்மதியிழத்தல். இழுபறியில் நடந்து கொண்டிருக்கும் விடயங்கள் சுமூகநிலைக்கு வந்து விடல்.

**மகரம்** பிறர் உங்களைத்தூக்கியோ அல்லது தாக்கியொ பேசினாலும் ஒரே மனநிலையைத் தக்கவையுங்கள். ஆரோக்கியத்தில் கூடிய கவனம் எடுப்பதினால் நோய் நிலை அற்றுப் போகும்.

**கும்பம்** காலாவதியான திகதியைக் கவனிக்காமல் பொருள் பெற்றதால் கவலையுறல். அநாமதேய பதகளிப்பும் மிரட்டலினால் பதகளிப்பும் பயப்பீதியும் தோன்றும்.

**மீனம்** வாஸ்த்து சோதிடமுறைக்கேற்ப புதியமனை அமைக்க நிலையம் தெரிவு செய்ய ஜோதியடரை நாடுதல். பயணம் இடைத்தங்கல் நாட்டில் அஞ்ஞாதவாசம் புரிய வைத்தல்.

# வாழ்வுக்கு வழிகாட்டும் சகுனஜோதிடம்

## காரியத்தடை உண்டாகும் சொற்கள்

நாம் வெளியே செல்ல முற்படுகையில் 'போகாதே' என்று தடை போட்டால் பொருள் இழப்பு, காரியத்தடை, ஆபத்தான நிலைமைகள் ஏற்படும்.

கூட வருகிறேன் என்று கூறினால் நினைத்த காரியம் நிறைவேறாது "எங்கே போகிறாய் என்று கேட்டால் கெடுதி ஏற்படும் "கூக்குரல்" கேட்டபின் இடையூறுகள் தோன்றும். புறப்படும் பொழுது அழைத்தால் வீண் அலைச்சல் தோல்வி, மனவருத்தம் உண்டாகும். அவலக் குரல் எனின் பயணத்தைக் கைவிடுதல் நன்று. சண்டை/கலகம் ஏற்படுமெனின் வீண்சச்சரவுகள், விவாதங்கள் ஏற்படும். அபசகுன வார்த்தை யாரேனும் பேசினால் புறப்பட்ட செயலில் தோல்வி தக்க வைக்கும். இறப்புச்செய்திகளைக் கேட்டல்/ அதுபற்றிய தந்திவரினும் அசுபபலன்கள் தொடரும் பிணம் எரிவதைக் காணின் புறப்பட்ட பயணத்தின் நோக்கம் கெடும் மரம்/மட்டை விழுவதால் காரியக்கேடும், ஆபத்தும் தக்க வைத்தல் கால் இடறினால் அலைச்சலும் /வேளை தப்பிய உணவும்/ தேடிச் சென்றவரைக் காணாதிருக்கும் நிலைப்பாடு தோன்றும். தலையில் இடித்தலும் அபசகுனமாகும்.

இழவுவீட்டுக்குச் சென்றால் போகிறேன் என்றும் மங்கள நிகழ்வுச் சம்பவங்களிலும் கலந்து கொண்டு மனைக்கு ஏகும்போது சென்று வருகின்றேன் எனக்கூற வேண்டும். இயற்கையாகவே நிகழும் சகுனங்களே உண்மைத்தன்மையுடையன வேண்டுமென்றே செய்தால் சகுனத்தடை அல்ல.

ஜோதிர் வித்யா ரத்னா
வி.ஏ.சிவராசா

INDIAN PREMIER LEAGUE 2014

# இன்றைய ஆட்டம்

**சென்னை எதிர் பெங்களூர்**

**இடம்: ராஞ்சி. நேரம்: மாலை 4 மணி**

**கொல்கத்தா எதிர் ஹைத ராபத்**

**இடம்:ஹைதராபத். நேரம்: இரவு 8 மணி**

# ரோம் ரென்னிஸ் தொடர்

## அரையிறுதியில் ஜோகோவிச், நடால்



(ரோம்)

ரோம் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒன்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டிக்கு சேர்பியாவின் ஜோகோவிச் மற்றும் நடால் ஆகியோர் முன்னேறியுள்ளார்.

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் உலகின் இரண்டாம் நிலை வீரரான சேர்பியாவின் ஜோகோவிச்சும், ஸ்பெயினின் டேவிட் பெர்ரரும் மோதினர். 2 மணிநேரத்திற்கும் நடைபெற்ற இந்த விறுவிறுப்பான ஆட்டத்தில் 7-5, 4-6, 6-3 என்ற செட் கணக்கில் ஜோகோவிச் பெர்ரரை வீழ்த்தி அரையிறுதி சுற்றுக்குள் நுழைந்தார். அரையிறுதியில் அவர் கனடாவைச் சேர்ந்த மைலோஸ் ரோனிக்கை எதிர்கொள்கிறார்.

மற்றொரு காலிறுதிப் போட்டியில் முதல் நிலை வீரர் நடால் (ஸ்பெயின்) 1-6, 6-3, 7-5 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரேயை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தார்.

தோல்வி குறித்து கருத்து தெரிவித்த ஆண்டி முர்ரே, வெற்றிபெற முயற்சித்தேன். ஆனால், நடால் முதல் நிலை வீரர் என்று நிரூபிக்கும் வகையில் ஆடினார். பிரெஞ் ஓப்பன் விரைவில் ஆரம்பமாகவுள்ளது. அதில் நிச்சயம் நடால் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி கிண்ணத்தை வெல்வார் என்று நம்புகின்றேன் என்றார்.

இதேவேளை, மகளிர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் நடப்புச் சம்பியனான செரீனா வில்லியம்ஸ், அமெரிக்காவைச் சேர்ந்த வர்வரா லெப்சென்கோவாவை 6-1, 6-2 என்ற நேர் செட்டில் தோற்கடித்தார்.

# பயிற்சிப் போட்டியில் இலங்கை வெற்றி




(லண்டன்)

இலங்கை அணிக்கும் இங்கிலாந்தின் பிராந்திய அணியான கென்ட் அணிக்குமிடையில் நடைபெற்ற பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி 123 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 301 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஞ்சலோ மத்தியூஸ் 51, திரிமன்ன 49, தினேஷ் சண்டிமால் ஆட்டமிழக்காமல் 47, டில்சான் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரொபி ஜோசப் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 302 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கென்ட் அணி 36.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அலெக்ஸ் பிலேக் 60, ஷாம் பில்லிங்ஸ் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சுரங்க லக்மால், திசர பெரேரா, அஜந்த மெண்டிஸ் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# தவறான தீர்மானம்; பிபா கவலை



கால்பந்து உலகக் கோப்பைப் போட்டிகளை 2022ஆம் ஆண்டில் கட்டாரில் நடாத்துவது என்பது தவறாக எடுக்கப்பட்ட முடிவு என்று சர்வதேச கால்பந்து சம்மேளனத் (பிபா) தலைவர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

பாரம்பரியமாக யூன் -யூலை மாதங்களில் நடாத்தப்படும் உலகக் கோப்பைப் போட்டிகளை, அந்த மாதங்களில் 50 செல்சியஸ் வரை வெயில் கொளுத்தும் கட்டாரில் நடாத்துவதற்கு பிபா ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

இந்த முடிவு தவறானதா என்று பிபாவின் தலைவர் ஸெப் பிளாட்டரிடம் சுவிஸ் தொலைக்காட்சி ஒன்று கேள்வி எழுப்பியது. ஆம் நிச்சயமாக என்று அதற்குப் பதிலளித்த அவர், எல்லோரும் வாழ்க்கையில் தவறு இழைத்திருக்கிறார்கள் என்று கூறினார்.

அதேநேரம் வளைகுடா நாடான கட்டார், 2022ஆம் ஆண்டு கால்பந்து உலகப் போட்டிகளை விலைக்கு வாங்கியுள்ளதாக கூறப்படும் விமர்சனங்களை ஸெப் பிளாட்டர் நிராகரித்தார்.

கட்டாரில் வெப்பம் மிக அதிகமாக இருக்கும் என்று சுட்டிக்காட்டிய அறிக்கையை பெற்றிருந்த நிலையிலும், பிபாவின் நிறைவேற்றுக்குழு கட்டாரின் போட்டிக் கோரிக்கையை அங்கீகரித்துவிட்டதாக அவர் கூறினார்.

இதேவேளை, கட்டாரில் குளிரான காலநிலை நிலவக்கூடிய ஆண்டின் இறுதிக்கட்டத்திற்கு போட்டி நகர்த்தப்படுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் பிபா தலைவர் தெரிவித்தார்.

# மெஸ்சியின் ஒப்பந்தம் நீடிப்பு

நான்கு முறை சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை வென்ற பார்சிலோனாவின் முன்கள வீரரான மெஸ்சி, அந்த அணியுடன் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளார். 2018ஆம் ஆண்டு வரை பார்சிலோனா அணியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள மெஸ்சிக்கு, உலகிலேயே மற்ற வீரர்களை விட அதிக சம்பளம் வழங்குவது என்பதே அந்த ஒப்பந்தத்தின் சாராம்சம். ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு அதிக சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு நிகராக மெஸ்சிக்கும் சம்பளம் அளிக்கும் பொருட்டு இந்த புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு தினங்களில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என பார்சிலோனா நிர்வாகம் தெரிவித்தது.

# தொடரை வெல்வோம்

(லண்டன்)

ஓர் அணியாக எமது திறனை வெளிப்படுத்தி இங்கிலாந்துடனான ஒரு நாள் தொடரைக் கைப்பற்றிக் கொள்வோம். சிறந்த கலவையாக எமது அணி இருப்பது இங்கிலாந்தில் சாதிக்கத் துணை புரியும் என இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

# ஆகஸ்டில்

## இலங்கை, பாகிஸ்தான் மோதல்

பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் ஒன்று எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ளது.

பாகிஸ்தானில் தீவிரவாதிகள் தாக்குதல் காரணமாக அங்கு எந்த நாட்டு கிரிக்கெட் அணியும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவில்லை.

பாகிஸ்தான் அணி பொதுவான இடத்தில் (ஐக்கிய அரபுஎமிரேட்ஸ்) விளையாடி வருகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஆகஸ்ட் மாதம் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்கிறது. இதன்போது 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

முதல் டெஸ்ட் ஆகஸ்ட் 6ஆம் திகதி காலி மைதானத்திலும், 2ஆவது டெஸ்ட் (கொழும்பு) 14ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளது. முதல் ஒருநாள் போட்டி ஆகஸ்ட் 23ஆம் திகதி நடைபெறவுள்ள அதேவேளை, 27ஆம் திகதி 2ஆவது போட்டியும், 30ஆம் திகதி 3ஆவது போட்டியும் நடைபெறவுள்ளது.

# உலக கால்பந்தாட்ட விழா

## வெல்லப்போகும் அணி எது?



லூக்கஸ் நீல்

**எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்**

தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்



## அவுஸ்ரேலியா சிறு பார்வை

அவுஸ்ரேலியா 2 1/2 கோடி மக்கள் தொகையைக் கொண்ட நாடு. 2006ஆம் ஆண்டு நடைபெற்ற உலக கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் கட்டத்துக்குத் தகுதி பெற்றது. 36 வயதுடைய, பின் கள வீரரான லூக் கஸ் நீல் (Lucas Neill) அணியின் தலைவராவார்.


2006, 2010 உலகக் கிண்ண போட்டிகளிலும் இவர் பங்குபற்றியிருந்தார். அவுஸ்ரேலியாவுக்காக அதிக கோல்களைப் போட்ட, 33 வயது முன் கள வீரர் ரிம் கஹில் (Tim Cahill), மற்றும் கடும் முயற்சியுடைய 22 வயது முன் கள வீரர் மத்தியு லுக்கி (Mathew Luckie) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கிறீஸ் நாட்டில் பிறந்த. அவுஸ்ரேலிய பிரஜையான அன்ஜலொஸ் பொஸ்ரெகொகுலு (Angelos Postecoglou) பயிற்சியாளராவார். இவர் களது அணி அமைப்பு 4 - 2 - 3 - 1.

Brasil 2014 FIFA WORLD CUP

# கால்பந்து திருவிழா

**இன்னும் 24 நாட்கள்**

யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்றம், பிரதேச இளைஞர் கழக அணிகளுக்கிடையில் நடாத்திய மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணப் பிரதேச இளைஞர் கழக அணி இரு பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியில் இரு பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தை வென்ற அணிகளைக் காணலாம். (48)

விளையாட்டு செய்திகள்

# கோப்பாய், தெல்லிப்பளை கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

(கொக்குவில்)

பிரதேச அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை, கோப்பாய் பிரதேச செயலக அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டன.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இதில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த வியாழக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற முதல் செட்டை 28-26 என்ற புள்ளிகள் அடிப்படையில் கோப்பாய் பிரதேச செயலக அணி கைப்பற்றியது. தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய கோப்பாய் பிரதேச செயலக அணி இரண்டாவது செட்டையும் 25-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென் றது. மூன்றாவது செட்டில் எழுச்சியுற்ற தெல்லிப்பளைப் பிரதேச செயலக அணி 25-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று பதிலடி கொடுத்தது. தொடர்ந்து நடைபெறும் செட்கள் விறுவிறுப்பாக நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் சுதாகரித்துக் கொண்ட கோப்பாய் பிரதேச செயலக அணி நான்காவது செட்டை 25-23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இறுதியில் 3-1 என்ற செட் கணக்கில் கோப்பாய் பிரதேச செயலக அணி வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியதுடன் மாவட்ட சம்பியனாக தொடர்ந்தும் அசத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளைப் பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேச செயலக அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

# இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் இன்றைய தினம் இரு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இதில் முதலாவது போட்டியில் திருநெல்வேலி கிரிக்கெட் எதிர் யூனியன்ஸ் மற்றும் ஸ்கந்தா ஸ்ரார் எதிர் ஸ்ரீகாமாட்சி அணிகள் மோதவுள்ளன. இப்போட்டித் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர்

மும்பை தாக்குதலுக்கு பின்னர் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையே தனிப்பட்ட தொடர் நடாத்தப்படவில்லை. ஆசிய கோப்பை போட்டி, ஐ.சி.சி. நடாத்தும் போட்டியில் இரு அணிகளும் மோதின.

இந்த நிலையில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இடையே 2015 முதல் 2023ஆம் ஆண்டு வரை 6 தொடர் நடாத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பி.சி.சி.ஐ.யுடன் (இந்திய கிரிக்கெட் சபை) ஒப்பந்தம் செய்து உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதில் 14 டெஸ்ட், 30 ஒரு நாள் போட்டி, 12 ருவென்ரி-20 போட்டி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் இரு நாட்டு இரசிகர்களுக்கும் பெரு விருந்தாக அமையும். இந்த வகையில் இந்தத் தொடர் நிச்சயம் நடாத்தப்படவேண்டும். வெறும் பேச்சுடன் நின்றுவிடக்கூடாது என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் அக்ரம் தெரிவித்துள்ளார்.

# அலன் ஜொலிப்பு வென்றது யாழ். மத்தி

(யாழ்ப்பாணம்)

அலனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலை அணிகள் சிநேகபூர்வமான போட்டிகளில் பங்கேற்று வருகின்றது. இதில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் சென். ஜோண்ஸ் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 33.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சகல துடுப்பாட்ட வீரர்களும் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர். பந்து வீச்சில் அலன், கௌதமன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 136 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி அலனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 44 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அலன் 35 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் துலக்ஷன் இரு விக்கெட்டுக்களைச் சாய்த்தார். (17)

# வென்றது வித்தியானந்தா

(முல்லைத்தீவு)

றிபேக் தாரகை அணிக்கெதிரான போட்டியில் வித்தியானந்தா கல்லூரியின் பழைய மாணவர் அணி 75 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

றிபேக் தாரகை அணிக்கும், முல்லைத்தீவு - வித்தியானந்தாக் கல்லூரி பழைய மாணவர் அணிக்குமிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச்சுழற்ச்சியில் வென்று முதலில் துடுப்பாடிய வித்தியானந்தா பழைய மாணவர் அணி 40.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 216 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய றிபேக் தாரகை அணி 38.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. (48)

# முன்னேற்றிய அணிகள்

(அராலி)

அராலி ஏ.எல்.விளையாட்டுக்கழகம் மற்றும் அராலி ஏ.எல். இளைஞர் கழகம் இணைந்து நடாத்தும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் அடுத்த சுற்றுக்கு சென். லூட்ஸ், யூனியன், யங்ஹென்றிஸ், நாமகள் அணிகள் முன்னேறியுள்ளன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் அராலி ஏ.எல். விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

ஜேம்ஸ் மற்றும் சென். லூட்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் சென். லூட்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் யூனியன், பாரதி அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யூனியன் அணி 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றபெற்றது.

மற்றுமொரு போட்டியில் யங்ஹென்றிஸ் அணியும் சென். நியூஸ்ரார் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யங்ஹென்றிஸ் அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் நாமகள், மகாத்மா அணிகள் மோதின. இதில் நாமகள் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (48)

# யாழ். மாவட்ட அணி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமத்திய மாகாண கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாவட்டங்களுக்கிடையிலான 12 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்ட அணிகளிலிருந்து 20 வீரர்களைத் தெரிவு செய்துள்ளதாக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயலாளர் எஸ்.விமலதாஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள மாவட்டங்களின் கிரிக்கெட் அணிகள் மோதவுள்ள இப்போட்டித் தொடர் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் யூன் 1 ஆம் திகதி வரை தம்புள்ளையில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ். மாவட்ட அணி: எஸ்.வினோத் (மானிப்பாய் பரிஷ்), ஏ.அன்புஜன் (ஜொனியன்ஸ்), பி.பத்மமயூரன் (பற்றீசியன்), வி.மணிவண்ணன் (ஜொலிஸ்ரார்ஸ்), வி.விதுபாலா (பல்கலைக்கழகம்), எம்.சந்திரகுமார் (ஜொலிஸ்ரார்ஸ்), கே.உதயசபேசன் (ஸ்ரான்லி), டபிள்யு.சபேசன் (மானிப்பாய் பரிஷ்), என்.காந்தசீலன் (கிறாஸ்கோப்பர்ஸ்), பி.நிதர்ஷன் (மானிப்பாய் பரிஷ்), ரி.செந்தூரன் (விக்டோரியா), வி.வாமணன் (ஜொலிஸ்ரார்ஸ்), ஏ.எம்.நோபேர்ட் (பற்றீசியன்), ஏ.சஞ்சயன் (ஜொனியன்ஸ்), ஏ.வி.துசாந்த (ஜொனியன்ஸ்), எல்.ஆதித்தன் (கொக்குவில் சி.சி.சி), கே.சிலோஜன் (கொக்குவில் சி.சி.சி), எஸ்.தவீந்தன் (பல்கலைக்கழகம்), எஸ்.விஸ்ணுராம் (பல்கலைக்கழகம்), பி.பிருந்தாபன் (ஜொனியன்ஸ்).

# உண்மைதானா?

**ஆ**ண் - பெண் இருவரிடையே, தங்களைப் பற்றிய எண்ணம் யாருக்கு அதிகம்? இதோ, “ரீடர்ஸ் டைஜஸ்ட்” சொல்கிறது:

உடல் சிறிது பாதிக்கப்பட்டாலும் அதை பெரிதுபடுத்துவதிலும், ஆர்ப்பாட்டம் செய்வதிலும் ஆண்களை மிஞ்சுபவர் பெண்கள். இது உண்மையா?

உண்மை... “என் கணவருக்கு சளி பிடிக்கும் போது, அவரை பார்க்க வேண்டுமே...” என்று, அங்கலாய்க்கும் பெண்களை, ஆண்கள் மிஞ்ச முடியாது.

பெண்களை விட ஆண்களுக்குத் தான் எப்போதும் தங்களைப் பற்றிய எண்ணம்...

தவறு. பெண்களுக்கு தங்களைப் பற்றிய பிரச்சினைகளே பெரிதாகத் தெரியும் வெளி விஷயங்களில் அவர்கள் அதிகம் அக்கறை கொள்வதில்லை.

பெண்களைப் பற்றி ஆண்கள் பேசுவதை விட, ஆண்களைப் பற்றி பெண்கள் தான் அதிகம் பேசி விவாதிப்பர்.

உண்மை. பல்கலைக் கழக ஆராய்ச்சிகள் மூலம், தங்கள் நேரத்தில் பெருமளவு ஆண்களைப் பற்றிய விவாதத்தில் பெண்கள் ஈடுபடுகின்றனர் என, தெரிய வந்துள்ளது. ஆண்கள் பெரும்பாலும் தங்கள் தொழில், பணம், மற்ற ஆண்கள், கடைசியில் தான் பெண்களைப் பற்றி பேசுகின்றனர்.

பெண்களை விட ஆண்கள் நேர்மையானவர்கள் உண்மையா?

உண்மையில்லை. தத்துவ ஆராய்ச்சியின்படி, விஷயங்களை மறைத்துப் பேசுவதில், ஆண்களை விட பெண்கள் தேர்ந்தவர்கள்; ஆனால், பச்சையாக, அப்பட்டமான பொய்களைச் சொல்லும் சாமர்த்தியத்தில், ஆண்களே வல்லவர்.


ஆண்களை விட நேரத்தைக் கழிக்க சிரமப்படுவர் பெண்கள். அலுப்பு சீக்கிரமே தோன்றி விடும் இது சரியா?

இல்லை. ஆண்களுக்குத் தான் வெகு எளிதில் போரடிக்கத் தொடங்கும் தொடர்ந்து ஒரு வேலை செய்தால், அசதி அதிகம் ஏற்படும். ஒரே வேலையை, அலுக்காமல் பெண்கள் தொடர்ந்து செய்ய முடிவதன் காரணம், ஆண்களை விட அதிகம் மகிழும் சுபாவமும், தன்னம்பிக்கையும் பெண்களுக்கு உண்டு.

மனைவியை, கணவன் புரிந்துகொள்வதை விட, கணவனை, மனைவி நன்கு புரிந்து கொள்வாள். இது சரியா?

தவறு. சில தத்துவ நிபுணர்கள் ஒரு ஆராய்ச்சி நடத்தினர். திருமணமான பல ஜோடிகளை அழைத்தனர். முதலில், கணவன்மார்களைத் தனியே கூப்பிட்டு, அவரவர் மனைவியைப் பற்றிய அபிப்ராயங்களைச் சொல்லச் செய்தனர். முடிவில் தெரிந்தது... கணவனே, தன் மனைவியை நன்கு புரிந்து கொண்டிருக்கிறான் என்று! எந்தெந்த நேரத்தில் எப்படி எப்படி மனம் மாறுவாள் என்பதை, கணவனால் நன்கு யூகிக்க முடிகிறது என்பதை கண்டறிந்தனர்.

துன்பங்களும், இடையூறுகளும் வரும்போது, பெண்கள் அதிகம் மனம் உடைந்து போவர். இது சரியா?




தவறு. சிறு தொல்லைகள் வரும் போது கலங்கினாலும், பெரிய இடையூறுகள் நெருங்கும் போது, சராசரி ஆண்களை விட பெண்களே உறுதியுடன் இருப்பர். இது, மனோத்தத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்த உண்மை.

ஆபத்து வரும் சமயத்தில், பெண்களை விட ஆண்கள் உஷாரானவர்கள் இது சரியா?

சரி. ஆபத்து எதிர்நோக்கி வருவதை குறிப்பால் உணர்ந்து கொள்வதிலும், அதற்காக தன்னைத் தயார் படுத்திக் கொள்வதிலும், பெண்களை மிஞ்சியவர்கள் ஆண்கள். இதுவும், ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்த உண்மை.

பேச்சுத் திறனில் பெண்களே வல்லவர்கள் உண்மையா?

பால பருவம் தாண்டியதுமே, ஆண்களின் பேசும் சக்தியை விட, அதிக சக்தியைப் பெற்று, விரைவில் சுலபமாகவும், வேகமாகவும் நீண்ட நேரமும் பேசும் தனித் தன்மையை பெண்கள் பெற்று விடுகின்றனர்.

# மதிப்பு வாய்ந்த பொருள் எது?

[சிறுவர் கதை]

**மு**ன்பொரு காலத்தில் பாரசீக நாட்டில் மன்னன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவன் தன்னைச் சுற்றிலும் அமர்ந்திருந்த அறிஞர்களைப் பார்த்து, ‘வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் எது?’ என்று கேட்டான்.

முதலாவதாக எழுந்த அறிஞர், ‘வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் உயிர். உயிர் இல்லையேல் இந்த வாழ்க்கையில் நாம் எதை அனுபவிக்க முடியும்?’ என்றார்.

இரண்டாவதாக இருந்த அறிஞர், ‘என் கருத்துப்படி வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் அறிவுதான். அறிவு இல்லாமல் நாம் வாழ முடியாது’ என்றார்.

மூன்றாவதாக ஒரு அறிஞர், ‘வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் பொறுமைதான். பொறுமையின்றி இந்த வாழ்க்கையில் எந்தப் பெருமையையும் அடைய முடியாது’ என்றார்.

நான்காம் அறிஞர், ‘வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் சூரியன்தான். சூரியன் இல்லையெனில் இந்தப் பூமியில் எந்த உயிரும் வாழ முடியாது’ என்றார்.

ஐந்தாவது அறிஞர், ‘வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் அன்புதான். மனிதர்களுக்கிடையில் அன்பு இல்லையெனில் ஒருவருக்கொருவர் பகைத்துக் கொண்டு அடித்துக் கொண்டு தங்களை மாய்த்துக் கொள்வார்கள்’ என்றார்.

ஆறாவதாக ஒரு அறிஞர், ‘வாழ்க்கையில் மிகவும் மதிப்பு வாய்ந்த பொருள் காலம்தான். நமக்குக் காலம் இல்லையெனில் உயிர் இருந்து என்ன பயன்? அறிவைப் பயன்படுத்த ஏது நேரம்? பொறுமையாக, இருக்க ஏது அவகாசம்? சூரியனைப் பயன்படுத்த ஏது காலம்? அன்பு காட்ட ஏது நேரம்? எனவே காலம்தான் மிக மதிப்புயர்ந்த பொருள் காலம்தான். ஆனால், அதைத்தான் நாம் பலரும் வீணடித்துக் கொண்டிருக்கிறோம்’ என்றார்.



# புதினமறியப் போன இடத்தில்...

வெ.மு.வியளனார்

**க**டந்த புதன்கிழமை பௌர்ணமி தினத்தன்று யாழ்ப்பாணம் டேவிட் வீதியிலுள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் மன்னாரிலிருந்து வந்திருந்த கலை இலக்கியப் படைப்பாளிகள் குழுவுடனான சந்திப்பொன்று நடைபெற்றது. நாமும் புதினமறியப் போயிருந்தோம்.

எழுத்தாளர் சட்டநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மன்னார் தமிழ் இலக்கியம் பற்றி தமிழ் நேசன் அடிகளாரும், 19ஆம் நூற்றாண்டு வரையான யாழ்ப்பாண இலக்கியம் பற்றி சி.ரமேஸூம், அண்மைக்கால யாழ்ப்பாண இலக்கிய செயற்பாடுகள் பற்றி வேலணையூர் தாஸூம் உரைகளை வழங்கினர்.

உரைகள் சுருக்கமும் பொறுப்புமுடையதாய் இருந்தது. தொடர்ந்து நட்பும் ஆரோக்கியமுமான கலந்துரையாடலும் நிகழ்ந்தது. இலக்கியக் கூட்டங்களில் இப்படி நிகழ்வது அபூர்வம் என்ற கருத்து பரவலாக இருந்துவருவதால் இவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டி வந்தது.



தமிழ்ச் சூழலில் இப்படியான சந்திப்புகள் அதிகம் இடம்பெற வேண்டியதன் அவசியத்தை வந்திருந்த அனைவரும் உணர்ந்துகொண்டிருந்ததாகத் தெரிந்தது. இதற்கு முன்முயற்சி எடுத்தவர்களைப் பாராட்டுதல் வேண்டும்.

கலந்துரையாடலின் போது பேராசிரியர் ஜெய்சங்கர், சமூகத்தில் ஒவ்வொருவருடைய கருத்துக்கும் தனியான முக்கியத்துவம் இருக்கிறது. இலக்கிய சாம்ராட்களின் எழுத்துக்களைக் கொண்டாடுவது ஒருபுறமிருக்க, ஒரு பள்ளிக்கூட மாணவன் இந்த சமூகத்தை அவன் பார்க்கும் பார்வையில் எழுத்தாக்குவதையும் நாம் பொருட்படுத்த வேண்டும் என்றார். சத்யஜித்ரேயின் படங்கள் மட்டுமே கலையாக இந்த சமூகத்தைப் பாதிக்கவில்லை ரஜினிகாந்தின் படங்களும் பெரும்பான்மையான மக்களால் கொண்டாடப்படுகின்றன. அவைகுறித்தும் நமக்கு அக்கறையான பார்வை இருக்க வேண்டும் என்றார்.

அலையிலும் சரி திசையிலும் சரி நான் பங்குகொண்ட இதழ்களில் எல்லாம் புதியவர்களின் படைப்புகளுக்கு அதிக கவனம் கொடுத்துச் செயற்பட்டோம். அதே சமயம், தரத்திலும் அக்கறையுடனிருந்தோம். விஷயமில்லாதவர்களை பப்பாசியில் ஏற்றிவிடக் கூடாதென்பதிலும் கவனமாயிருந்தோம் என்றார் யேசுராசா.

தரம் குறித்துக் கவனிக்கவே வேண்டும். நாம் எதிர்பார்க்கும் தரத்தோடு போதிய படைப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதால்தான் “தவிர” சஞ்சிகையைத் தொடர்ந்து கொண்டுவர முடியவில்லை என்று த.விஷ்ணு சொன்னார்.

தரமான படைப்புகள் குறித்த நேரத்திற்குள் வந்துசேராமலிருப்பது, அச்சடிக்கும் ஐநூறு பிரதிகளையும் விற்க முடியாமலிருப்பது, விநியோகிக்கப்பட்டவைக்கும் பணம் வந்துசேராமலிருப்பது போன்ற காரணங்களினால் கலைமுகம் சஞ்சிகையைத் தொடர்ந்து கொண்டுவருவதில் சிரமத்தை எதிர்நோக்குவதாக செல்மர் எமில் தெரிவித்தார்.

பூரணியோ, கவிதை இதழோ எதுவென்று சரியாக நினைவிலில்லை. நிறுத்தப்பட்ட போது, பணமோ விற்பனையோ வேறு கஷ்டங்களோ காரணமல்ல, நாம் எதிர்பார்க்கும் தரத்தில் படைப்புகள் வராததினால்தான் நிறுத்த வேண்டி ஏற்படுகிறது என்ற கடைசி அறிவிப்புடனேயே அது நின்ற ஞாபகம். ஆக, படைப்புச் செயற்பாடு இங்கு வறுமையிலிருப்பது இப்போது மட்டுமல்ல என்று தெரிகிறது. முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பும் இதே நிலைமைதான்!

கூட்டத்தில் பலரும் பேராசிரியர் அவர்களே என்றோ சேர் என்றோ விளித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்படி மரியாதை தருவது இயல்பானதுதான். நமக்குத்தான் பாடம் நடக்கின்ற இடத்தில் வந்து அமர்ந்துவிட்டோமோ என்ற அந்த விலகல் ஏற்பட்டுவிடுகிறது. பெரும்பாலும் பேராசிரியர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களுக்கெல்லாம் அவர்களது மாணவர்களே அதிகளவில் வருவார்கள் போலும்.

ஒருவரது வேலையை, படித்த படிப்பை குறிப்பிட்டுத்தான் இலக்கியக் கூட்டங்களில் விளிக்க வேண்டுமா? நம்மையெல்லாம் “வேலை எதுவும் இல்லாதவரே... எஸ்.எஸ்.சி பாஸ் பண்ணினவரே...” என்றெல்லாம் விளித்துப் பேசவேண்டி வந்துவிட்டால் சங்கடமாக இருக்காதா? மேலைநாடுகளில் ஜனாதிபதியைக் கூட மிஸ்டர் பிரசிடென்ற் என்று அழைப்பதை செய்திச் சனல்களில் பார்க்கும்போது, ஒப்பீட்டளவில் அங்கு மனிதர்கள் சமமாக மதிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வு நமக்கு வருவது உண்மைதானே?

கொழும்பில் ஒருசமயம், விபவி கூட்டம் என்று ஞாபகம். இராமகிருஷ்ணமிஷன் சிறிய மண்டபத்தில் நடந்தது. பேச்சாளர்கள் எல்லோரும் “பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதுபோல... பேராசிரியருக்கு இது நன்கு தெரியும்... பேராசிரியர் அடிக்கடி சொல்வார்... பேராசிரியர் இதுபற்றி எழுதியிருக்கிறார்...” என்றவாறாக பேசிக்கொண்டிருந்தார்கள். மேடையில் பேராசிரியர் சிவத்தம்பி அமர்ந்திருந்தார். யாரைக் குறித்துப் பேசுகிறார்கள் என்று புரிந்ததால், எதுவும் வித்தியாசமாகப் படவில்லை. ஒருகட்டத்தில் மேடையில் அமர்ந்திருந்த பேராசிரியர் சிவசேகரம் சிறு இடையீடு செய்தார். நாட்டில் இருபதோ முப்பதோ தமிழ்ப் பேராசிரியர்கள் இருக்கிறார்கள். இங்கேயும் கூட நால்வர் இருக்கிறார்கள். (பேராசிரியர்கள் சந்திரசேகரம், தில்லைநாதன் ஆகியோரும் கூட்டத்திலிருந்தார்கள்) நீங்கள் எந்தப் பேராசிரியரைக் குறிப்பிடுகிறீர்கள் என்று சொல்லவேண்டாமா எனக் கேட்டார்.

பெயரைச் சொல்லிப் பேசுவதுகூட மரியாதைக்குறைவாகி விடுமோ என்கிற எண்ணம் நமக்கிருக்கிறது. இது தமிழ்நாட்டு அரசியல் பாரம்பரியத்திலிருந்து வந்ததாக இருக்கலாம். அங்குதான் “பேராசிரியர் பேசுகிறார்” என்று போஸ்டர் ஒட்டியிருந்தால் யார் பேசப்போகிறார் என்று எல்லோருக்கும் விளங்கியிருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

# சும்மா பறந்து பறந்து நாடுகள் சென்று தமிழர்களை ஏமாற்றிய உதயகலா

## (வாக்குமூலம்)




தென்னிந்திய சினிமா படத்தில் வரும் பிராடு பயல்களை எல்லாம் மிஞ்சும் அளவு உதயகலா உள்ளார். என்னதான் சினிமா படத்தை உதாரணம் காட்டினாலும், நிஜ வாழ்க்கையில் இப்படியா? இவர் உலகமகா ஜித்தர் என்று சொல்லும் அளவுக்கு உள்ளது.

உதயகலா ஊரில் உள்ள பலரிடம் பணத்தைப் பெற்றுள்ளார் அதுவேறு விடயம். அது ஒரு புறம் இருக்க, இவர் 2013ஆம் ஆண்டு மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கும் சென்றுள்ளார். மலேசியாவில் உள்ள தமிழர்களிடம் தாம் ஷொப்பிங் கொம்பிளக்ஸ் ஒன்றை வாங்க வந்துள்ளதாக கூறியுள்ளார். அத்தோடு இவர் 3 பிள்ளைகளுடன் சென்றுள்ளார். அவர்களில் இருவர், புலிக-ளின் மூத்த தளபதிகளில் ஒரு-வரது பிள்ளைகள் என்றும், அவர்களைத் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது கரங்களால் பிடித்து, தன்னிடம் ஒப்படைத்ததாக 70mm "பயாஸ்கோப்" காட்டியுள்ளார் என்றால் பாருங்களேன்!

அட தேசியத் தலைவரே தன் கைகளால் பிள்ளைகளை பிடித்து இவரிடம் ஒப்படைத்தாரா என்று வியந்த மலேசிய மக்கள் பலர், இவர் சொன்ன ஒரு திட்டத்தைக் கேட்டு பணத்தைக் கொடுத்துள்ளார்கள். (அது மீண்டும் புலிகளை ஆரம்பிக்கும் திட்டம் அல்ல) புதிதாக மலேசியாவில் ஒரு பிசினஸ் ஆரம்பிக்கும் திட்டம்.

இதேவேளை மலேசியாவில் தான் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும் என்று சொல்லி ஒரு பாதிரியாரை உதயகலா அணுகி, 2013ஆம் ஆண்டு மலேசியாவில் ஞானஸ்நானம் வேறு எடுத்துள்ளார். இதனை புகைப்படம் மற்றும் வீடியோவாக பதிந்து தருமாறு ஒரு புகைப்படக் கலைஞரை(ஈழத்து) இவர் கோரியுள்ளார். அதற்கான பணத்தை(2000 வெள்ளி) தருவதாக கூறி ஏமாற்றித் திரிந்த உதயகலா, ஒரு நாள் மலேசியாவில் இருந்து கம்பி நீட்டியுள்ளார். (சொல்லாமல் கொள்ளாமல் அப்படியே இலங்கைக்கு ஓடிவிட்டார்)

இதேவேளை பிரித்தானியாவில் இருந்து இலங்கை சென்ற ஒரு தாய், மற்றும் அவரது பிள்ளை ஒருவரை உதயகலா கும்பல் கடத்தி, பணம் பறிக்க முயற்சி செய்துள்ளார்கள். இது 2011ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ளது. பிரித்தானியாவில் இருந்து இக் குடும்பத்தாரின் உறவுகள் சுமார் 19 இலட்சத்தை அனுப்புயுள்ளார்கள். உதயகலா... தாய் மற்றும் மகளை விடுவித்துவிட்டு அவர்களோடு வந்த மேலும் ஒரு நபரை கைதியாக வைத்திருந்துள்ளார். (அவரது பெயரில் தான் இலங்கையில் வங்கிக்கணக்கு உள்ளது)

பணம் இலங்கை வங்கியில் போடப்பட்ட பின்னர் ஒரு நாள் சென்று, சுமார் 40,000 ரூபாவை ஏ.ரி.எம் மெஷின் ஊடாக எடுத்துள்ளார்கள். பின்னர் அந்த வங்கி அட்டையை தாம் வாங்கி வைத்துக்கொண்டு, குறித்த நபரை விடுதலை செய்துவிட்டார்கள். அவர் கொழும்புக்கு தப்பி வந்து பொலிசாருக்கும் தனது வங்கிக்கும் இவ்விடயத்தை தெரியப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு பல நூறு ஈழத் தமிழர்களை ஏமாற்றி, தற்போது இந்தியாவில் இருக்கும் உதயகலாவை இலங்கைக்கு நாடுகடத்தக் கூடாது என்று தமிழக முன்னணி அரசியல்வாதிகளில் ஒருவரான டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளதாக, அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. அட இந்த ஆள் சிங்களவர்கள் வெளியிடும் செய்திகளை மட்டும் தான் படிப்பாரா? என்று தெரியவில்லை. உதயகலா ஒரு 420 என்று தெரியாமல், அவரை ஒரு தமிழ்த் தேசியப் போராளி என்ற ரேஞ்சில் இவர்கள் விடும் அறிக்கை மழையைப் பார்த்தால் இவர்களுக்கு ஈழம் இந்தியாவில் இருந்து எந்தப்பக்கமாக இருக்கிறது என்று கூடத் தெரியாது போல இருக்கே?

(நன்றி: இணையம்)

---

# முகவரி தொலைத்த முகங்கள் 3

- சாத்திரி -

அன்று வானிலை கொஞ்சம் மோசமாகவே இருந்தது அலைகள் பெரிய மலைப்பாம்புகள் போல வளைந்து நெளிந்து கப்பலில் மோதி அசைத்துக் கொண்டிருக்க வரதன் கப்பலை அலைகளின் போக்கிற்கு ஏற்ப திசை திருப்பி அதன் அசைவை குறைத்துவிட்டு வரும்போது மற்றையவர்கள் கப்பலிற்கு புதிதாக ஒட்டுவதற்காக ஸ்ரிக்கர்கள் போல தயாரிக்கப்பட்டு வைத்திருந்த R.SAMIR என்கிற பெயரை கப்பலின் மேல் தளத்தில் வரிசையாக அடுக்கிமுடித்திருந்தார்கள். அதனை வரதன் ஒரு தடவை சரி பார்த்துக் கொண்டிருக்கும் போதே.. சரி நான் முதல் இறங்குறன் என்றபடி கயிற்று ஏணியில் குட்டி இறங்கத் தொடங்கியிருந்தான்.

ஐயோ என்கிற சத்தத்தை கேட்டு அனைவரும் ஓடிப்போய் கீழே எட்டிப் பார்த்தபோது கடல் நீரில் மெல்லிய வட்ட வடிவ நீர்த்திவலைகளில் சிவப்பு நிறம் விரிந்து சென்று கொண்டிருந்தது. வட்டமாய் சுற்றிவைக்கப் பட்டிருந்த கயிற்றை இடுப்பில் கட்டி விட்டு கடலில் குதிக்கத் தயாரான பத்தனை தடுத்து நிறுத்திய வரதன் ராஜனோடு சேர்ந்து கயிற்றைப் பிடித்து மெதுவாக கடலில் இறக்கியதும், கை கால்களை அடித்து தத்தளித்தபடி கடலின் மேல் மட்டத்திற்கு வந்த குட்டியை எட்டிப் பிடித்த பத்தன் அவனது கைகளை தனது தோளில் போட்டு முதுகோடு இணைத்து வரதன் எறிந்த இன்னொரு கயிற்றால் கட்டிக்கொள்ள அனைவருமாக சேர்ந்து அவர்களை கப்பலிற்குள் இழுத்து எடுத்து கப்பலின் மேல் தளத்தில் குட்டியை கிடத்தினார்கள். அவன் முனகியபடியே மயக்க நிலைக்கு போய்க்கொண்டிருந்தான்.

அவசரமாக முதலுதவிப் பெட்டியை தூக்கிக் கொண்டு ஓடிவந்த றோகன் குட்டியை புரட்டிப் போட்டு இரத்தம் வழிந்துகொண்டிருந்த அவனது பிடரிப் பகுதியில் ஒரு துணியை வைத்து அழுத்திப் பிடித்துக்கொண்டிருக்க, அன்ரன் காயப்பகுதியை சுற்றியிருந்த தலை முடிகளை மள மளவென கத்தரிக்கோலால் வெட்டியபடியே, டேய்.. சேவிங் றேசர் ஒண்டு கொண்டு வாங்கோ என கத்த கப்பலின் படிகள் வழியே கீழே ஓடிப்போன பத்தன் தனது தாடி வழிக்கும் சேவிங் றேசரை கொண்டு வந்து நீட்டின்னான். தலைமுடி குட்டையாய் வெட்டிய பகுதி முழுவதையும் மெதுவாக ராஜன் வழித்து முடித்ததும் காயத்தில் அழுத்திப் பிடித்திருந்த துணியை விலக்கிய றோகன் காயத்தின் மீதும் இருந்த முடிகளை வெட்டிவிட்டு இரண்டு அங்குலம் அளவிற்கு கிழிந்து போயிருந்த அவனது காயத்தை விரல்களால் அழுத்தி இணைத்துப் பிடித்து தையல் போடத் தொடங்கியபோது அவனது மீறி காயத்திலிருந்து இரத்தம் கசியத் தொடங்கியிருந்தது.

றோகன் அவசரமாக முதலுதவிப் பெட்டியில் இருந்து வலி மருந்து ஊசியை எடுத்து குட்டிக்கு ஏற்றிவிட்டு அவனது கைகளை இறுக்கமாக பிடித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் குட்டிக்கு வலி குறைந்திருக்கவேண்டும், டேய் எல்லாரும் சாப்பிட்டிங்களாடா யார் சமைச்சது என்று கேட்டதும், நான் தான் சமைச்சனான் சாப்பிடவேண்டியது இவங்கடை தலைவிதி என்று சொன்ன ராஜனிடம் டேய் பெரு விரல் குட்டியின் தலையில் உள்ளே அமிழ்வதை உணர்ந்தவன் நிமிர்ந்து வரதனைப் பார்த்து மண்டையோடு உடைஞ்சிருக்கு கீழை விழேக்குள்ளை தலை பலகையிலை அடிபட்டிருக்கு என்றபடி தைத்து முடித்து அதன் மீது மருந்து போட்டு துணியால் தலையை சுற்றி கட்டுப் போட்டு முடிக்கும் போதே குட்டி முழுவதுமாய் மயங்கிப் போயிருந்தான்.


*** *** *** *** ***

குட்டி மோசமாக காயமடைந்த விடயம் உடனடியாக தாய்லாந்திலிருந்த தலைமையகத்திற்கு தெரிவிக்கப் பட்டது. கப்பல் தரித்து நிற்கும் திசையை சரியாக கேட்டு அறிந்து கொண்டவர்கள், அடுத்ததாக என்ன செய்யலாமென்பதை மீண்டும் அறிவிப்பதாக சொல்லியிருந்தார்கள். அன்று பகல் முழுதும் ஒருவரோடு ஒருவர் அதிகம் பேசிக்கொள்ளாமலேயே ஒரு பக்கம் முழுதுமாக பெயர் மாற்றும் வேலையை முடித்திருந்தார்கள்.

அன்றிரவு குட்டி கண் விழித்துப் பார்த்தான். தலையை அசைக்க முயன்றான் முடியவில்லை. கழுத்திற்கு மேலே தலை வீக்கமடைந்திருந்தது. என்ன செய்யுதடா என்று அவனது முகத்திற்கு நேரே குனிந்து கேட்ட றோகனிடம், முடியேல்லையடா.. தலை சரியா வலிக்குதடா.. என்றபடி எழுந்திருக்க முயன்றான் அவனால் முடியவில்லை. டேய்.. காலை அசைக்க ஏலாமல் இருக்கடா கை மட்டும் அசைக்கிற மாதிரி இருக்கடா வலிக்குதடா என்று சத்தமிடத் தொடங்க, அவனது தலையில் போடப் பட்டிருந்த துணிக் கட்டையும் என்ரை உடுப்பு பையிலை ஒரு பேர்ஸ் இருக்கு அதை ஒருக்கா எடுத்துத்தாடா என்றான் குட்டி.

ராஜன் எடுத்துக் கொடுத்த பேர்சை சிரமப் பட்டு வலக்கையால் வாங்கி பிரித்துப் பார்த்தவன் கண்களில் ஒரு மகிழ்ச்சியோடு இத்தனை நாளா நீங்கள் கேட்ட என்ரை ராசாத்தி இதுதான்ரா என்று காட்டினான். பாஸ்போட் அளவு கறுப்பு வெள்ளை புகைப்படத்தில் இரட்டைப் பின்னலோடு சிரித்துக்கொண்டிருந்தாள்.. அந்தப் படத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவன், டேய் ஆறு வருசமா காதலிக்கிறம் இந்த வருசம் கப்பல்லை இருந்து இறங்க அனுமதி கேட்டிருக்கிறன் அப்பிடி அனுமதி கிடைச்சால் என்ரை ராசாத்தியை கலியாணம் கட்ட முடிவெடுத்திருந்தனான். சில நேரம் நான் செத்துப் போயிட்டால் தயவு செய்து பாரமான பெரிய இரும்பு ஒண்டோடை என்ரை பிணத்தை கட்டி கடல்லை போட்டு விடுங்கோடா. ஏனெண்டால் என்ரை பிணம் மிதந்து போய் சில நேரம் இலங்கை கரையிலை கிடந்து அது செய்தியா வந்து நான் செத்திட்டன் என்கிற செய்தி அவளிற்கு தெரியவேண்டாம் அவள் தாங்கமாட்டாள் என்றபோது கன்னங்கள் வழியே வழிந்த கண்ணீர் படுக்கையில் விழத் தொடங்க, சே.. உனக்கு ஒண்டும் இல்லையடா கெதியா சுகமாயிடும் திரும்பவும் நீ சமைச்ச சாப்பாட்டை நாங்கள் சாப்பிடவேணும் என்று றோகன் ஆறுதல்படுத்தினான். மீண்டும் குட்டிக்கு வலியெடுக்கத் தொடங்க இந்தத் தடவை றோகன் மயக்க மருந்தை செலுத்தினான்.

(தொடரும்)





வங்கிகளில் கொள்ளைச் சம்பவங்களைத் தடுப்பது தொடர்பில் வங்கியாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இதன்போது யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன உரை நிகழ்த்துவதையும், கலந்து கொண்ட பொலிஸ், வங்கி அதிகாரிகளையும், வங்கியாளர்களையும் காணலாம். (படங்கள் ஆர்.ராஜகுமார்)

# சரியான முடிவுகள் எடுக்காததால் இலக்குகள் எட்டப்படவில்லை

## -வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



தமிழர்களின் அரசியல் போராட்டங்களுக்கு தலைமை தாங்கியவர்கள் சரியான முடிவுகளை எடுக்காததன் காரணமாக அந்தப் போராட்டத்தின் இலக்குகள் அடையப்படவில்லை. என வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை முழங்காவிலில் கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

2008ஆம் ஆண்டுக்குப் பின்பு தமிழ் அரசியற் களம் அல்லது சமகாலப் பிரச்சினைகள் என்பது வாரத்திற்கு ஒவ்வொரு முறை மாறுவது போல தோன்றுகின்றது. இதற்கு காரணம் சில ஊடகங்கள் அவை மக்களை உணர்ச்சிவசப்படக் கூடிய சுவாரஸ்யமான செய்திகளை வெளியிட்டு அரசியல் எவ்வாறு நகர்கின்றது அல்லது என்ன நடக்குது என்று தெரியதவாறு மக்களை ஒரு மாயைக்குள் வைத்திருக்கின்றனர்.

உண்மையில் இந்த வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரைக்கும் செயல்திறன் இல்லாத மாகாண சபையாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. ஏனைய மாகாண சபைக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைப் போல் 37 அதிகாரங்கள் வடக்கு மாகாண சபைக்கு இருக்கின்றது. இரண்டு அதிகாரங்களைத்தவிர ஏனைய அதிகாரங்கள் அனைத்தும் இருந்தும் இந்த இரண்டு அதிகாரங்களைச் சொல்லிச்சொல்லியே ஏனைய 35 அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்தாமல் இருக்கின்ற நிலவரம்தான் அங்கு இருக்கின்றது.

இதைவிட மாகாண சபைக்கும் அரசாங்கத்துக்கும் பொதுவான அதிகாரங்கள் கூடபல இருக்கின்றன. ஆனால் அந்த அதிகாரங்கள் சார்ந்த செயற்பாடுகள் கூட நடைபெறுவதில்லை. இதனால் அனைத்து துறைகளும் நாளாந்தம் பின்நடைவை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றன. எனவே மக்கள் மாறிவரும் அரசியல் போக்கை அறிந்து கொள்ளவும் அதற்கேற்ப செயற்படவும் முயற்சிக்கவேண்டும் அப்போதுதான் அடுத்துவரும் காலங்களேனும் மக்களுக்கு சுபீட்சமான காலங்களாக அமையும் என்றார்.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்றஉறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார். பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர்களான மனோகரன் மற்றும் இராமச்சந்திரன் ஆகியோரும் பூநகரிபிரதேசசபை உறுப்பினர்களான காசிம் மற்றும் இராசலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# முதியோர் சங்கம் தெரிவு

சமூக சேவைகள் அமைச்சு 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம நடைபெற உள்ள சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு சிறந்த முதியோர் சங்கத்தை தெரிவு செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது.

அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளர் சுவிந்த எஸ். சிங்கப்புலி இதற்கான சுற்றுநிருபத்தை மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர்கள், மாவட்ட செயலாளர்கள் ,பிரதேச செயலாள்ர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்

பிரதேச செயலக பிரிவுகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் முதியோர் சங்கங்களிலிருந்து மாவட்ட மட்டத்தில் 3 முதியோர் சங்கங்கள் தெரிவு செய்யப்படவுள்ளது.

அவ்வாறு தெரிவு செய்யப்படும் சங்கங்களின் விபரம் மாவட்ட செயலாளரால் மாகாண சமூக சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

மாகாண பணிப்பாளரால் மாகாண மட்டத்தில் முதல் 3 இடங்களை பெறும் சங்கங்கள் தேசிய ரீதியிலான போட்டிக்கு அனுப்பி வைக்கப்படும்.

முதியோர் நலன்பேணலில் சிறப்பாக செயற்படும் முதியோர் சங்கங்களை ஊக்குவிக்கும் நோக்கில் இத் திட்டம் செயற்படுத்தப்படுவதாக செயலகத்தின் பணிப்பாளர் தெரிவித்தார். (90)

# பாடத்தெரிவு தொடர்பான விசேட கருத்தரங்கு

க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கு தகைமை பெற்றுள்ள மாணவர்களுக்கு பாடத்தெரிவு தொடர்பான செயலமர்வுக்கருத்தரங்கை யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம் நடாத்தவுள்ளது.

இச் செயலமர்வுகள் காலை 9.30 மணிக்கு கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், நாளைமறுதினம் கனகரட்னம் மத்திய மகாவித்தியாலயம், எதிர்வரும் வியாழக்கிழமை உரும்பிராய் இந்து மகா வித்தியாலயம், 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, 26ஆம் திகதி திங்கட்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி, 29ஆம் திகதி வியாழக்கிழமை இடைக்காடு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறும்.

2014/2015 கல்வியாண்டில் க.பொ.த உயர்தரம் கற்கவுள்ள மாணவர்கள் அனைவரையும் தவறாது இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புனித பத்திரிசியார் கல்லூரியில் இச்செயலமர்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது (10)

# படைப்பாளிகளின் கலந்துரையாடல்



மன்னார் யாழ்ப்பாண இலக்கிய படைப்பாளிகள், கலைஞர் இடையேயான ஒன்றுகூடலும் கலந்துரையாடலும், கடந்த புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருமறைக்கலாமன்றம், கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெற்றது.

எழுத்தாளர் சட்டநாதன் தலைமையில் நடைபெற்ற. இந்நிகழ்வில் மன்னார் தமிழ் இலக்கியம்பற்றி தமிழ்நேசன் அடிகள். மன்னார் நாட்டுக்கூத்துக்கள் பற்றி எஸ். ஏ.உதயன். யாழ்ப்பாண இலக்கியம் பற்றி சி.ரமேஸ். அண்மைக்கால யாழ்ப்பாண இலக்கியச் செயற்பாடுகள் பற்றி வேலணையூர் தாஸ். ஆகியோரின் உரைகள் இடம்பெற்றது. (48)

# வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு, (நேற்றைய தொடர்ச்சி)

**பிரிவு iv கட்டுரை வரைதல்**

சி. தேனுகாசினி(யா/விக்கினேஸ்வரா கல்லூரி), சி.கலைமதி (யா/பொலிகண்டி இ.த.க பாடசாலை), ர.ராஜனா (யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை)

**இலக்கணப்போட்டி**

சு.விஜேந்தினி (யா/வட இந்து மகளிர் கல்லூரி), வி.சாளினி (யா/கரண வாய் ம.வி ), கு.மாதுமை (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

**குறுநாடகப் போட்டி**

கு.டியூசா (யா/மணற்காடு றோ.க.த.க.பா), ந.அபிசா (யா/விக்கினேஸ்வரா கல்லூரி), சி.சிவாஜினி (யா/தும் பளை சிவப்பிரகாச வித்தி)

**கவிதை ஆக்கம்**

கி.யுவேகா (யா/நெல்லியடி மத்திய கல்லூரி), சி.சிரஞ்சீவி (யா/ஹாட்லிக் கல்லூரி), இ.சிந்துஜன் (யா/உடுத்துறை ம.வி),

**சிறுகதை ஆக்கம**

க.கோபிகா (யா/வல்லை மகளிர் ம.வி), வ.சங்கீர்த்தனா(யா/வடமத்திய மகளிர் கல்லூரி), க.சிந்துஜா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரி வித்தியாலயம்).

**பேச்சு**

மோ.சங்கீர்த்தனா (யா/வடமத்திய மகளிர் கல்லூரி),பா.சௌமியா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) யோ.துவாரகா (யா/பொலிகண்டி இ.த.க பாடசாலை)

**பாவோதல்**

சி.சங்கவி(யா/வட இந்து மகளிர்கல்லூரி), ஜெ.விவேகா(யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி),ஆ.அனுசியா (யா/வல்லை சிவகுரு வித்தியாலயம்)

**இசை - தனி**


லோ.கோமதுரன்(யா/ஹாட்லிக் கல்லூரி), பா.விதுஷாயினி(யா/விக்கினேஸ்வரா கல்லூரி), நா.சஜீவன்(யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி)

**நடனம் - தனி**

சி.ஆரணி(யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ம.மதுரா(யா/வடமத்திய மகளிர் கல்லூரி), கௌ.சினேகா (யா/நெல்லியடி மத்திய கல்லூரி)

(தொடரும்...)

# யாழ். ரயில் நிலையத்தில் மேம்பாலம் அமைக்க டக்ளஸ் ஆலோசனை



தற்போது புனரமைக்கப்பட்டு வரும் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

புனரமைக்கப்பட்டு வரும் கட்டடத்தின் நுழைவாயில் வாகனங்கள் உட்செல்ல போதாத நிலையில் இருப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர் ரயில் நிலையத்தின் பின்புறம் ஸ்ரான்லி வீதிப் பக்கமாக வாகனங்களை அதிகளவில் உட்செல்ல வழிவகைகள் செய்யப்படல் குறித்து அவதானம செலுத்தியுள்ளார்.

இதற்கமைவாக மேம்பாலம் அமைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்படி உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும் உணவகம் அமைவிடம் தொடர்பிலும் அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் முன்பு இருந்ததைப் போல் அதே அமைவிடத்தில் உணவகம் அமைய வேண்டும் எனவும் கீழ் தளத்தில் அமைக்கப்படவுள்ள உணவகம் உரிய விஸ்தீரணத்தைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பளை முதல் யாழ்ப்பாணம் வரையில் அமைக்கப்பட்டு வருகின்ற ஏனைய ரயில் நிலையக் கட்டடங்களை அமைச்சர் எதிர்வரும் வாரங்களில் பார்வையிடவுள்ளார்.

இதனிடையே எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் ரயில் யாழ்ப்பாணம் வரக்கூடிய வகையில் அனைத்து பணிகளும் துரிதப்படுத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்தனர்.

## இளைஞர் கல்லக்கழகத்தின் புதிய நீர்வாகிகள் தெரிவு

குருநகர் இளைஞர் கலைக்கழகத்தின் 45 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 7ஆம் திகதி குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணிப்பணிமனையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். பிரதேச கலாசாரப் பேரவை கலை மேம்பாட்டுச் செயலாளர் எம்.நெல்சன் மற்றும் கழக மூத்த உறுப்பினர்களும் புதிய இளம் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

நடப்பு வருட புதிய உத்தியோகத்தர்களில் தலைவராக செல்வி. எஸ். அபிலாசினியும் செயலாளராக செல்வன்.எ.கனிசியஸ்ஸும் பொருளாளராக செல்வன்.பி.யூலியஸும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கழகத்தின் இவ்வருட செயல் திட்டமாக "அம்பர்" மீனவநடனம், நாட்டுக்கூத்து (தென்மோடி)ஆகிய பாரம்பரியமாக வழிவந்த கலைகளை இளம் சந்ததிக்கு வெளிப்படுத்தி பயிற்சி அளித்து பாதுகாப்பதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (27)

# யாழ்.முஸ்லிம்களுக்கு இந்திய வீடுத்திட்டம்

## அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சுமூக நிலை ஏற்பட்ட பின் யாழ்ப்பாணத்திற்கு மீள் குடியேற்றப்பட்டுள்ள முஸ்லிம் குடும்பங்களின் நிலையை கருத்தில் கொண்டு யாழ் - கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதேச செயலரிடம் 317 குடும்பங்களின் விபரங்கள் கையளிக்கப்பட்டன.

தற்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சி காரணமாக முதற்கட்டமாக 161 குடும்பங்களுக்கு இந்தியன் வீட்டுத்திட்டத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த வீட்டுத்திட்ட நடவடிக்கைகளை மீள் குடியமர்ந்துள்ள முஸ்லிம் குடும்பங்கள் பெறுவதற்கு முழுமையான முயற்சியையும் நடவடிக்கையையும் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு யாழ்.முஸ்லிம் சமூகம் சார்பில் மாநகர சபை உறுப்பினர் பி.எஸ்.எம். சரபுல் அனாம் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

# அறிவியல் கருத்தரங்கு



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனமும் இணைந்து நடாத்திய திருக்குறளில் அறிவியல் கருத்துக்கள் என்ற பொருளில் அமைந்த கருத்தரங்கு கடந்த புதன் கிழமை நல்லூர் யூரோவில் கருத்தரங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பொருளாளர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் டி.எப்.சி.சி வர்த்தக வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.ரவீந்திரா வரவேற்புரையையும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் வாழ்த்துரையையும் வழங்கினர்.

தொடர்ந்து முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசனின் நெறிப்படுத்தலில் கருத்தரங்கு இடம்பெற்றது. திருக்குறளில் பொறியியல் என்ற பொருளில் எந்திரி மு.தில்லைநாதனும் திருக்குறளில் பொருளியல் என்ற பொருளில் தமிழ்ச்சங்க உபதலைவரும் கல்வியியற் கல்லூரி பேராசிரியருமாகிய மா.சின்னத்தம்பியும் திருக்குறளில் மருத்துவம் என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப் பேராசிரியர் கா.சிவபாலனும் திருக்குறளில சட்டம் என்ற பொருளில் ஓய்வு பெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசுவும் திருக்குறளில் முகாமைத்துவம் என்ற பொருளில் யாழ்.தமிழ்ச்சங்க தலைவரும் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதியுமாகிய பேராசிரியர் தி.வேல்நம்பியும் கருத்துரைகளை வழங்கினர். யாழ். தேசிய . கல்வியியற் கல்லூரி விரிவுரை இணைப்பாளர் பா.பாலகணேசன் நிறைவுரையையும் முகாமையாளர் சம்மேளன இணைப்பாளர் வி.நிரஞ்சன் நன்றியுரையையும் நல்கினர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழ், தமிழ்த்தேசியம், 100 ஆண்டுகளாக வேர் ஊன்றியுள்ள தமிழகத்தில் சமீபஆண்டுகளில் தான் இவ்வெறுப்பு அரசியல் துளிர்விடுகிறது, அதற்கு என்ன காரணம்?

ஒரு நூற்றாண்டாக வேரோடியுள்ள தமிழ்த் தேசியத்தில் சில நியாயங்கள் இருந்தன. சொல்லப்போனால் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வரலாறு உடையது இது. வட மொழி ஆதிக்கம், பார்ப்பன மய்மாக்கல் ஆகியவற்றிற்கு எதிராகக் கிளர்ந்தது அது. அது கூறிய வடவர் ஆதிக்கம் என்பது இன வெறுப்பின் அடிப்படையிலானதல்ல. மாறாக வட நாட்டு பண முதலைகள் மற்றும் முதலாளிகளின் ஆதிக்கத்தை எதிர்த்தது அது. அது என்னாளும் வடநாட்டிலிருந்து இங்கு வந்து எளிய தொழில்களைச் செய்து பிழைப்பு நடாத்திவந்த தொழிலாளிகளையோ இல்லை 300 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து தம் மூதாதையர் மண்ணில் வேரிழந்த மக்களையோ எதிரியாகக் கட்டமைத்ததில்லை. இன வெறுப்பு அரசியலைச் சுய முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தில் கொண்டதில்லை.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் குறிப்பாக 1940 – 80 காலகட்டம் உலகெங்கிலும் பாசிசம் பின்னடைந்த காலம். சோவியத் வீழ்ச்சிக்குப் பின் மீண்டும் பாசிசம் புத்துயிர்ப்புக் கொண்ட சூழலில் தற்போது உருவாகியுள்ள தமிழ்த் தேசிய அமைப்புகள், உலகளாவிய இந்தப் பாசிசச் சூழலின் 'மாதிரி' யில் இங்கு இன்று தம்மைக் கட்டமைத்துக் கொண்டுள்ளன. இவர்கள் மார்க்சீய வெறுப்பு மட்டுமல்ல அது முன்னெடுத்த வரலாற்று ஆய்வுகளில் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்கின்றனர்.

குறைந்த ஊதியத்தில் உழைத்துப் பிழைக்க வந்து, எந்த விதப் பணியிடப் பாதுகாப்பும் இல்லாமல் இங்குள்ள ஒப்பந்தக்காரர்களாலும், முதலாளிகளாலும் கடும் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படும் இந்தப் பிழைக்க வந்த வேற்றுமொழி அப்பாவிகளை அடித்துத் துரத்த வேண்டும் எனச் சொல்கிற பாசிச அரசியலுக்கு இன்றைய தமிழ்த் தேசியம் செல்வதை நீங்கள் இந்தப் பின்னணியிலிருந்து பார்க்க வேண்டும்.

**– அ.மார்க்ஸ்**

காலிஸ்தான் போராட்டத்தில் பீகாரில் இருந்து பஞ்சம் பிழைக்கப்போன கூலிகளை அடித்தார்கள் அப்போது தேசிய இனப்போராட்டமாக நியாயப்படுத்தப் பட்டது. இவர்களை வெல்வது எப்படி என்பதற்கு பதிலாகக் கொல்வது எப்படி என்கிற வங்குரோத்து அரசியலை தேசிய இனப் போராட்டத்தின் ஓர் உத்தியாகப் பார்க்கிறோம். இப்படி ஓர் உத்தியை முன்வைக்கிற ஒரு போராட்டம், தன் அற அடிப்படையை அழித்துக்கொள்கிறது. திரும்ப அந்த அற அடிப்படையை முன்வைக்க முடியாது. அந்தத் தவறைத் தவறு என ஏற்றுக்கொண்டு அதைச் செய்ததற்காக ஒரு பெரிய தியாகத்தை மன்முவந்து ஏற்றுச் செய்யும்போது தான் அந்த அறம் திருப்பிக்கிடைக்கும் வாய்ப்புண்டு. இதைத் தான் நாம் வரலாற்றில் பார்க்கிறோம். **– நாகார்ஜுனன்**

சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக, தமிழ் தேசியவாதிகளின் போராட்டத்தை இடதுசாரிகள் ஆதரிக்க வேண்டும் என்று தமிழ் தேசியவாதிகள் எதிர்பார்ப்பது நியாயம் தான். ஆனால், அதே தமிழ் தேசியவாதிகள் உக்ரைன் விடயத்தில் மட்டும் தடம்புரள்வதை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. உலகம் முழுவதும் உள்ள தேசியவாதிகள் மத்தியில், அந்தளவுக்கு பகை முரண்பாடுகள் நிலவுகின்றன. தேசியவாதிகள் மத்தியில் ஒற்றுமை கிடையாது. ஒரு தேசியவாதிக்கு இன்னொரு தேசியவாதியை பிடிப்பதில்லை.

நாசிஸத்தை பகிரங்கமாக வெளிப்படுத்த தயங்காத, உக்ரைனிய பேரினவாதத்திற்கு எதிரான, ரஷ்ய தேசியவாதிகளின் போராட்டத்தை, ஏன் இவர்கள் ஆதரிப்பதில்லை? உக்ரைனில் ரஷ்ய சிறுபான்மையினரின் மொழிப் பிரச்சினையை இவர்கள் ஏன் அங்கீகரிப்பதில்லை? இவர்களை தமிழ் தேசியவாதிகள் என்று அழைப்பதை விட, "அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களுக்கு ஆதரவான வலதுசாரிகள்" என்று அழைப்பதே பொருத்தமானது.

ரஷ்யாவும், உக்ரைனும் முதலாளித்துவ நாடுகள் என்பதையும், இரண்டிலும் தேசியவாதிகள் பலமாக இருப்பதையும், எந்த தமிழ் இடதுசாரியும் உணராமல் இருப்பதாக நான் கேள்விப் படவில்லை. கடந்த இருபது வருடங்களாக அதை சொல்லி வந்திருக்கிறார்கள்.

ஆனால், தமிழ்த் தேசியவாதிகள் அப்படி அல்ல. அவர்களைப் பொறுத்தவரையில், அமெரிக்கா என்ன சொன்னாலும் அது வேத வாக்கு. அமெரிக்கா ஒரு நாட்டை ஆதரித்தால் இவர்களும் ஆதரிப்பார்கள், அதே நாட்டை அமெரிக்கா எதிர்த்தால் இவர்களும் எதிர்ப்பார்கள். **– கலையரசன்.தா**

# திக்கற்ற முதியோர் வாழ்வுக்கு வழிகாட்டும் கைதடி முதியோர் இல்லம்

(திருநெல்வேலி)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் படுத்த படுக்கையாக உள்ள 41 பேரும், மனநிலை பாதிக்கப்பட்ட 39 பேரும், பார்வையிழந்த 7 பேரும், தாயும் மகளுமாக 3 பேரும், கணவன் மனைவியாக 2 பேரும் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்கள் 103, பெண்கள் 77 என மொத்தம் 180 முதியவர்கள் முதியோர் இல்லத்தில் உள்ளார்கள். அரசாங்கத்தின் மாதாநத 1000 ரூபா உதவிப்பணம் பெறுவோர் 111 பேர் உள்ளனர்.

இங்குள்ள முதியவர்களின் இறப்பு வீதம் தற்போது 75 வீதமாகக் குறைந்துள்ளது. இங்கு தங்கியுள்ள முதியோர்களில் 40 வீதமானவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை.

இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கும் முதியவர்கள் பகுதிக் கிராம சேவகர், பிரதேச செயலர், சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோரின் சிபாரிசின் பேரிலேயே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நீதிமன்றம் மற்றும் வைத்தியசாலைகளின் அறிவுறுத்தலுக்கமையவும் சிலர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.


1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கைதடி அரச முதியோர் இல்லத்தில் இதுவரை பல நூற்றுக்கணக்கான முதியவர்கள் வைத்துப் பராமரிக்கப்பட்டுள்ளனர்.

அரசினால். இம் முதியோர் இல்லம் நாடத்தப்பட்டு வந்தாலும் பல நலன்விரும்பிகள், தொண்டு அமைப்புக்கள் போன்றவை அடிக்கடி இங்கு தங்கியுள்ள முதியவர்களுக்குப் பல அன்பளிப்புக்கள், உடுபிடவைகள், தின்பண்டங்கள் பேன்றவற்றை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்கள் யாத்திரை, சுற்றுலா என அடிக்கடி வெளியில் உத்தியோகத்தர்களினால் அழைத்துச் செல்லப்படுவதனால் முதியோர்கள் மிகவும் உற்சாகத்துடன் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)



அச்சுவேலி - வளலாய் பகுதியில் சேதமடைந்த நிலையில் நீண்ட காலமாக புனரமைக்கப்படாது பற்றைகள் செடிகளுடன்காணப்படும் நெசவுசாலையினைக் காணலாம். (85)



முன்னாள் திரைப்பட இயக்குநரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான திலக் வேஹெல்ல நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார். நோய்வாய்ப்பட்டுள்ள அவரிடம் நலம் விசாரித்த ஜனாதிபதி அவரது வைத்தியச் செலவுக்காக நிதி உதவியும் வழங்கினார்.

# மன்னார் வளைகுடாவில் தனது இருப்பை வலுப்படுத்துகிறது கெய்ன் இந்தியா

(கொழும்பு)

மன்னார் கடற்பரப்பில் தனது இருப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கு "கெய்ன் இந்தியா" நிறுவனம் முயற்சி செய்து வருகிறது.

இதற்கான நடவடிக்கைகளில் இந்த நிறுவனம் இறங்கியுள்ளது.

கெய்ன் இந்தியா நிறுவனத்தின் வருமானமானது 3.1 பில்லியன் அமெரிக்க டொலராக அமைந்துள்ளதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த வருடாந்த அதிகரிப்பானது 7 சதவீதமாக அமைந்துள்ளதென கெய்ன் இந்தியா நிறுவனத்தின் 4 ஆம் காலாண்டுக்கான நிதியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கெய்ன் இந்தியா நிறுவனத்தின் இடைக்கால நிறைவேற்றுப் பணிப்பாளர் பி.இளங்கோ தெரிவிக்கையில், கடந்த நிதியாண்டில் எமது செயற்றிறனானது எமது துறையில் பெரும் பிரதிபலிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், இதனால் உற்பத்தியில் பாரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதோடு அனைத்துப் பங்குதாரர்களின் இறக்குமதி செலவீனத்தையும் குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது.

மேலும் ராஜஸ்தான் மாநிலத்தில் இந்த வருடம் மார்ச் மாதத்தில் 200 மில்லியன் எண்ணெய் பீப்பாய்களையும் மற்றும் நாள் ஒன்றுக்கு 200,000 பீப்பாய்களை பெற்றுக் கொள்வதற்கான மைல் கல்லையும் எமது நிறுவனம் எட்டியுள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் மன்னார் கடல்பரப்பிலுள்ள எரிவாயு கண்டுபிடிப்பு தொடர்பாக இலங்கை அரசுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வரும் கெய்ன் இந்தியா நிறுவனம், அந்தப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட எரிவாயுவை வர்த்தகமயமாக்கி அதனூடாக பணத்தை முதலீடு செய்வதற்கும் மேலும் வருமானத்தை ஈட்டக்கூடிய தொலைநோக்கு ஆற்றல் கொண்ட ஒரு கண்ணோட்டத்தை செலுத்துமாறும் இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறித்த பகுதியிலுள்ள எரிவாயு அகழ்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கையாக மதிப்பீடுகள் மற்றும் வர்த்தக ஆய்வுகளையும் மேற்கொள்ள கெய்ன் இந்தியா நிறுவனம் கடந்த 2013 ஆம் ஆண்டு தீர்மானித்தது.

2013 நவம்பர் மாதத்துக்கான ஆண்டறிக்கையின்படி, மன்னார் கடல் பரப்பின் தெற்கிலுள்ள 5 தொகுதிக்கான ஏலச் சுற்றிலும் நிறுவனம் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது

# இந்திய - இலங்கை உறவில் தளம்பல் நிலை இருக்காது

## பிரசாத் காரியவசம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் பலமான மத்திய அரசு இருப்பதனால் எதிர்காலத்தில் இலங்கையுடனான உறவில் தளம்பல் இருக்காது என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்தார்.

இந்திய மக்களவைத் தேர்தலில் நரேந்திர மோடி வெற்றி பெற்றதன் மூலம் இலங்கை இந்திய உறவுகள் மேலும் வலுபடும் என இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்திய மக்கள் இந்தத் தீர்மானமிக்க வெற்றியையும், காங்கிரஸ் கட்சியின் தோல்வியையும் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையில் மிகவும் பலம் வாய்ந்த மத்திய அரசு உருவாகவுள்ளமை இலங்கைக்கு மகிழ்ச்சியளிப்பதாக பிரசாத் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

பலமான மத்திய அரசு இருப்பது இலங்கையுடனான உறவுகளை பிரச்சினையின்றி தொடர்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமென எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

பாரதிய ஜனதாக்கட்சி தனித்து ஆட்சியமைப்பதற்கு தேவையான ஆசனங்களை சுவீகரித்துள்ளதால், மத்திய அரசாங்கத்தை நிறுவுவதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராமின் ஆதரவைப் பெறவேண்டிய தேவை பாரதிய ஜனதாக் கட்சிக்கு இல்லையென இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மேலும் குறிப்பிடடார்.

# மாத்தறையில் புதிய போக்குவரத்து ஒழுங்கு

யுத்த வெற்றி விழாவை முன்னிட்டு இன்று முதல் மாத்தறையில் புதிய போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மாத்தறையிலிருந்த பஸ் தரிப்பு நிலையமானது தற்காலிகமாக ஸ்டேதீனுக்கு மாற்றப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

பாரவூர்திகளான லொறி - ரக் என்பன காலியிலிருந்து கத்தரகம், ரங்கொல ஊடாக வெலிகம, டிக்வெல நியூ றோட், பெலிற்றா, ஹக்மன, கம்புறுப்பிட்டிய, அக்குரஸ ஊடாக மாதத றையை அடைய முடியும் எனவும் கத்தரகம, தங்காலயிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பயணிகள் பேருந்து போன்றன தலால தொழில்நுட்ப கல்லூரியூடாகச் செல்ல முடியும்.

தெற்கு அதிவேக பாதையில் செல்லும் வாகனங்கள் கொடாகம சந்தி வழியாக அக்குரஸ்ஸ, ஹூனுகொட்டுவ, குட்செட்டினை அடைய முடியும் எனவும் கூறப்படுகிறது. மேலும் வல்கம வெலிகொட வீதியின் மூலம் இவ் வாகனங்கள் அதிவேக பாதையை அடைய முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## விசேட கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

சட்ட உதவி ஆணைக்குழுவின் விசேட கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

கண்ணகைபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி மு.ப. 10.00 மணியளவில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில். பொது மக்களுக்கான சட்ட உதவிச் சேவைகள் வழங்கப்படவுள்ளன.

# குருநாகல் கொலை பொலிஸ் சீருடை மீட்பு

(கொழும்பு)

ஆயுதம் தாங்கிய குழுவினால் குருநாகல், கெட்டுவான சந்தியில் வைத்து கடத்தப்பட்ட போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களின் சீருடைகளும் எரிக்கப்பட்ட நிலையில் நீர்கொழும்பு, திம்பிரிகஸ்கட்டுவ பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து குற்றப்புலனாய்வு விசாரணை திணைக்களத்தினால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டிலிருந்து வழக்கிற்கான. தடயப்பொருட்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் இந்த வீட்டை கடநத மார்ச் மாதம் வாடகைக்கு பெற்றிருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தெரிவித்துள்ளனர்.

அந்த தகவல்களின் அடிப்படையிலேயே வீட்டை தேடியறிந்து கொண்டதாக அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

கடத்தப்பட்ட இருவரில் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டதுடன் மற்றொருவர் காயங்களுடன் உயிர்தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வறட்சி நிவாரணம் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

கடும் வறட்சியினை எதிர்நோக்கும் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு வறட்சி நிவாரணங்களை வழங்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கடும் வறட்சி காரணமாக பல பிரதேசங்களில் குடி நீர் மற்றும் நீர்ப்பாசன வசதியற்று மக்கள் பல மாதங்களாக கடும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.


நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் சில நாட்களுக்குள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

12). பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

1). காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்தி **ஆக்கத்தக்க** மிகப் பெரிய எண்யாது.

| | |
|---|---|
| 5 | 2 |
| 1 | 3 |

.....................


2).  உருவில் ஒரு மீன் ரின் காணப்படுகின்றது அதன்,

1. விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .....................
2. வட்ட முகங்களின் எண்ணிக்கை யாது? .....................

3). 949 உடன் 741 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகையாது? .....................


4). **5072 இலிருந்து 2929 ஐக் கழிக்க.** வித்தியாசம் யாது? .....................

5) ஒரு மணித்தியாலத்திற்குள் நகருக்குள்ளே நுழைந்த வாகனங்களின் எண்ணிக்கையை வரைபு காட்டுகிறது. வரைபை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.




I. நகரத்திற்குள் குறைந்த அளவில் நுழைந்த வாகனம் எது? .....................
II. நகரத்திற்குள் நுழைந்த வாகனங்களின் மொத்த எண்ணிக்கை? .....................
III. கூடிய அளவில் நுழைந்த வாகனத்திற்கும், குறைந்தளவில் நுழைந்த வாகனத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? .....................

6. வழங்கப்பட்டுள்ள சதுரக் கோட்டுப்படம் சமபகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசமத்தில் எழுதுக.



.....................

7. 


காட்டப்பட்ட உருவின் சுற்றளவு யாது? .....................

8. ஒரு போத்திலிலுள்ள நீரின் கனவளவு 200ml இத்தகைய 6 போத்தல்களிலுள்ள நீரின் கனவளவு யாது? .....................

9. 360 தோடம்பழங்கள் 4 பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது? .....................

10. ஓர் எண்ணை 3 ஆல் பெருக்க வருவது 12 ஆகும். அதே எண்ணை 12 ஆல் பெருக்கி 6 ஆல் வகுக்க வரும் விடை யாது? .....................

13. "நாம் சென்ற கல்விச்சுற்றுலா" என்னும் தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. (நான்கு சொற்களுக்குக் குறையாத வசன அமைப்புடனும், சரியான எழுவாய், பயனிலையோடு வாக்கியங்கள் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.)

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



01. பின்வரும் பாடல் பகுதியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளைப் பாடலிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

ஒற்றுமையாக விரல்கள் இருப்பதால்
உன்தன் கைக்கு மிகுந்த பலம்!
ஒற்றுமையாக மக்கள் வாழ்வது
ஒவ்வொரு நாட்டிலும் நிறைந்த வளம்!

தேடித் தேடிப் படிப்பவர்
தெளிந்த அறிவை அடையலாம்.
ஓடி ஓடி உழைப்பவர்
உயர உயர ஏறலாம்.

கிலுகிலு கிலுவென மழை
சிரிக்க வைப்பது மழை
அள்ளிக் கொள்ளவும் மழை
ஆட்டம் போடவும் மழை.

1. ஒவ்வொரு நாட்டிலும் நிறைந்த வளம் எது? .....................
2. விரல் என்பதன் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக. .....................
3. இங்கு வந்துள்ள இரட்டைக் கிளவி எது? .....................
4. அடுக்கு மொழி ஒன்று எழுதுக. .....................
5. அழ என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. .....................
6. பாடலில் வந்துள்ள பெயர்ச் சொல் ஒன்று எழுதுக. .....................

02. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.

I. உணவின் மறுபெயர் ..................... (ஊன், ஊண்)

II. ஆற்றில் வருவது ..................... (வெல்லம், வெள்ளம்)

03. I. பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.

கிளிகள் பழுத்த கனிகளைக் கொத்தித் தின்றன. .....................

II. பின்வரும் வாக்கியத்தைப் பன்மையாக மாற்றி எழுதுக.

மரம் முறிந்து விழுந்தது. .....................

**04. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.**

I. கை கொடுத்தல் :- ....................................

II. கண் திறந்தல் :- ....................................

**05. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் ஆக்குக.**

I. கல்வி/ எழுத்து/ இளமையிற்/ சிலையில் ....................................

II. கடிப்பது/ பழக்கமாகும்/ தவறான/ நகம் ....................................

III. நிறத்துணியால்/ ஆனது/ ஒலிம்பிக் கொடி/ வெள்ளை ....................................

**06. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

I. காற்றுள்ள போதே தூற்றிக் கொள். ....................................

ii. ஆழமறியாமல் காலை விடாதே....................................

07) பின்வரும் தமிழ்ச்சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

i. பாடசாலை ....................................
ii. வீடு ....................................
iii. கிணறு ....................................

**08. கருத்தைத் தமிழில் எழுதுக.**

I. Good morning ....................................
II. Where are you going? ....................................
III. Please sit down ....................................

**09. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.**

I. கபுடா களு பாட்டய ....................................

II. ஓயாகே நம மொக்கத? ....................................

**10. இலங்கையில் உள்ள இரு மாவட்டங்களின் பெயரை எழுதுக.**

I. .................................... II. ....................................

**11. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1. சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் பூக்கும் பூ,
   I. முள்முருக்கு II. இலுப்பை
   III. இறப்பர் IV. பாலை

2. பின்வருவனவற்றுள் ஆணி வேர் உள்ள தாவரம்,
   I. பனை II. தென்னை
   III. நெல் IV. வேம்பு


3. தாவரங்களில் இரவைக்கழிக்காத பிராணி,
   I. ஆடு II. ஆந்தை
   III. தேவாங்கு IV. காகம்



4. தாவர இலைகளை வளைத்துச் சுருட்டி கூடுகட்டுவது
   I. தேன்குருவி II. வண்ணத்துப்பூச்சி
   III. நத்தை IV. செவ்வெறும்பு

5. முலையூட்டி வகையைச் சேராதது,
   I. நாய் II. வௌவால்
   III. கோழி IV. குரங்கு

6. பொருட்கள் அடைத்து வரும் பெட்டிகளில் இக்குறியீடு குறிப்பது.



   I. இப் பக்கம் மேலே
   II. இப் பக்கம் கீழே
   III. இப் பக்கம் வலது பக்கத்தில்
   IV. இப் பக்கம் இடது பக்கத்தில்

7. பின்வருவனவற்றுள் நிறையுணவு,
   I. இடியப்பம் II. இறைச்சி
   III. கருவாடு IV. பால்

8. சமையலின் போது சமைப்பவர் பயன்படுத்தும் அங்கி,
   I. ஏப்ரன் II. துடைதுணி
   III. பாவாடை IV. சட்டை

9. திடீர் விபத்து ஏற்படும் போது அம்புலன்ஸ் வண்டியை அழைக்க வேண்டியிருப்பின் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்,
   I. 220 II. 1110 III. 110 IV. 1220

10. உள்ளூர்த் தபால் அனுப்புவதற்கு செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த முத்திரைக் கட்டணம்,
   I. ரு 8. 00 II. ரு 5. 00 III. ரு 10. 00 IV. ரு 4. 00

11. அடிப்படை வர்ணங்கள் எத்தனை?
   I. 4 II. 5 III. 3 IV. 2

12. பனிக்கட்டியை நீரில் இடும் போது அவதானிக்கக் கூடியது,
   I. பனிக்கட்டி மிதக்கும் II. நிறம்மாறும்
   III. அமிழும் IV. வெடிக்கும்

13. அரச இலச்சினையில் "தன்னிறை வைக்" குறிப்பது
   I. நிறைகுடம் II. நெற்கதிர் III. சூரியசந்திரர் IV. தர்மசக்கரம்


14. காந்தம் கவராத பொருள்
   I. ஊசி II. சவர அலகு III. ஆணி IV. ஈர்க்கு

15. இலங்கையின் தேசிய விளையாட்டில் ஒரு அணியில் பங்கு பற்றும் வீரர்களின் எண்ணிக்கை
   I. 10 பேர் II. 11 பேர் III. 6 பேர் IV. 4 பேர்

# சுய இலாப அரசியல் மூலமாக

# மக்கள் பிரச்சினையை தீர்க்க முடியாது

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

உண்மையிலேயே மக்களை நேசிக்கின்ற மக்கள் பிரதிநிதிகளால் மட்டுமே அந்த மக்களை தேடிச்சென்று அவர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்ளவும், தீர்த்து வைக்கவும் முடியுமே தவிர அரசியலுக்காவும், சுய நலன்களுக்காகவும் செயற்படுகின்ற எந்தப் பிரதிநிதிகளாலும் இந்த பணியை மேற்கொள்ள முடியாது என ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கண்டாவளை பெரியகுளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கட்டைக் காடு கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

இந்த மாவட்டத்தில் நாங்கள் மக்களை தேடிச் செல்லாத இடங்களே இல்லை எல்லா கிராமங்களுக்கும் சென்று அங்கு மக்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகளை அறிந்து அரசியல் அங்கம் வகிக்கின்ற கட்சி எனும் பலத்தின் ஊடாக பெருமளவுக்கு நிவர்த்தி செய்திருக்கின்றோம், நிவர்த்தி செய்தும் வருகின்றோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் எந்தெந்த கிராமங்களில் என்னென்ன பிரச்சினைகள், தேவைகள் உள்ளது என்பதனை நாங்கள் நன்கு அறிவோம். இது இந்த மாவட்ட மக்களுக்கும் எமக்கும் இடையே இருக்கின்ற நெருக்கமான உறவின் வெளிப்பாடேயாகும் என்றார்.

இதேவேளை கட்டைக்காடு மக்களின் காணி, வீட்டுத்திட்டம், வீதிப்புனரமைப்பு, மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளையும் கவனத்தில் எடுத்துக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் விரைவில் தீர்வுகாண்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலாளர் த.முகுந்தன், ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கண்டாவளை பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் பூ.ராஜ்வினோத், குடியேற்ற உத்தியோகத்தர் பௌதாரணி, மற்றும் கிராம அலுவலர் சேகர், சமுர்த்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வலிகாமம் மேற்கில் மகளிர் சங்கங்கள்

## மகளிர் விவகார அமைச்சு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மகளிர் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் இந்த மகளிர் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளில் மகளிர் விவகார அமைச்சின் உத்தியோகத்தர்களும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் களும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர் ஏற்கனவே சில பிரிவுகளில் இந்த மகளிர் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (க)



வடக்கின் வசந்தம் திட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முழங்காவில் ம.வி (தேசிய பாடசாலை) இற்கு 35 மில்லியன் ரூபா செலவில் கணனிக்கூடம், விஞ்ஞானகூடம் உள்ளடங்கலாக 90 x25 நீளம் கொண்ட 3 மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வேலைகள் முடிவடைந்து பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் இதற்கான திறப்பு விழா இடம்பெறவுள்ளதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவிக்கின்றனர். (112)

# மாடு திருட்டு சம்பவத்தில் இருவர் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரம்பொன் மேற்குப் பகுதியில் மாட்டைத் திருடிய சம்பவத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் வசிக்கும் சதீஸ்குமார் தேவமலர் என்பவர் தனது மாட்டைக் காணவில்லை என ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

இம்முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போதே அப்பகுதியில் மாடொன்று வெட்டப்பட்டு இறைசச்சிக்கு விற்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து சந்தேகத்தின் பேரில் குறித்த பகுதியைச் சோந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# கிளி.இல் தாவரவியல் பூங்கா அமைக்கும் பணி விரைவில்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் தாவரவியல் பூங்காவொன்றை அமைப்பதற்கு தாவரவியல் பூங்கா மற்றும் பொது பொழுது போக்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வடமாகாணத்திற்கே உரித்தான உயர் பல்வகை மற்றும் அருகிவரும் தாவரங்கள் மற்றும் பூக்களை பாதுகாப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தாவரவியல் பூங்காவை அண்மித்த பகுதிகளில் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியுமா எனவும் தாவரவியல் பூங்கா மற்றும் பொது பொழுது போக்கு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

உத்தேச பூங்கா அமைக்கப்படவுள்ள பகுதியை கண்காணிப்பதற்காக அமைச்சர் ஜயரத்ன ஹேரத் விரைவில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அழகியற் கற்கைநெறி விண்ணப்பிக்க வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தால் நுண்கலைமானி (கர்நாடக சங்கீதம் / நடனம் / நாடகமும் அரங்கியலும் / கட்புல தொழில்நுட்பக் கலைகள்) கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான செயன்முறை திறன் காண் பரீட்சைக்கு தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்குரிய கல்வித் தகைமையாக 2013 இல் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் (2013/2014) பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவின் கைநூலின் (3.2 பிரிவைப் பார்க்கவும்).


அத்தோடு தாம் தெரிவு செய்த பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியும் (C) ஏனைய பாடங்களில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

செயன்முறைத் திறன்காண் பரீட்சைகள் அனைத்தும் தமிழ் மொழி மூலம் மட்டுமே நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் கிழக்குப் பல்கலைக்கழகம், கல்லடி, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னா கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கபடல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செய்முறைத் திறன்காண் பரீட்சை எனக் குறிப்பிட்டு அனுப்புமாறும் மேலதிக விபரங்களை 0652222663 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஞானச்சுடர் மலர் வெளியீட்டு விழா

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் வைகாசி மாத மலர் வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு இந்நூல் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளதுடன் நூல் வெளியீட்டுரையை பொலிகண்டி சி.சிவபாலசிங்கம், மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை, கணேசமூர்த்தி ஆகியோர் வழங்கவுள்ளனர்.



புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய பங்கில் யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற குடும்பம் எனும் வடிவில் தெருவெளி ஆற்றுகையினைக் காணலாம். (48)

# ஏ-32 வீதி புனரமைப்பு ஆரம்பம்

# மக்களின் ஒத்துழைப்புக்கு கோரிக்கை

ஏ -32 வீதியின் 17. 5 ஆவது கிலோமீற்றர் தொடக்கம் 22 ஆவது கிலோமீற்றர் வரையான அதாவது சங்குப்பிட்டி பாலத்திலிருந்து பரமங்கிராய் சந்தி வரையான வீதி வடக்கின் வீதி இணைப்புத் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் RR கட்டுமாண ஒப்பந்தகாரரால் வீதி அளவீடு செயயும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு புனரமைப்பு பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


இப் புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பான பொதுமக்கள் குறைகேள் கூட்டம அண்மையில் பூநகரி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

வடக்கின் வீதி இணைப்புத் திட்ட பொறியியலாளர் ஜி.கவிதா, கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், MG-ECL ஆலோசனை நிறுவனத்தின் வதிவிடப் பொறியியலாளர் சி.நாகேந்திரன் இவ்வேலையைப் பொறுப்பேற்றுள்ள ஒப்பந்தகாரரான RR கட்டுமாண நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஆர்.வசந்த, உள்ளூர் திணைக்கள தலைவர்கள், கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகளும், மீன்பிடிப் பரிசோதகரும் மீன்பிடித் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தற்போது இவ வீதியில் உள்ள நீர் போக்கிகள் அமைந்துள்ள இடங்களில் மதகுகளை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ள அவற்றை அமைதது தருவதாக உறுதியளிக்கப் பட்டது.

வீதி ஆழமாக அகலப்பட்டு புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுவதால் அகலம் குறைந்த ஒருவழிப் பாதையூடாகவே போக்குவரத்து செய்ய வேண்டியுள்ளதாலும் வீதியின் இருபக்கமும் கடலால் சூழப்பட்டிருப்பதாலும் பயணிகள் அனைவரும் அவதானமாக பயணம் செய்யுமாறும், பயணிகள் பேருந்து தவிர்ந்த ஏனைய கனரக வாகனங்கள் இப் பாதையினூடாக பயணிப்பதை தவிர்த்துக் கொள்வது புனரமைப்பு பணிகளை துரிதமாக முன்னெடுப்பதற்கு வசதியாக இருக்கும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் சரித்திர வெற்றிபெற்ற மோடியை அழைக்கிறது அமெரிக்கா



இந்தியாவில் சரித்திர வெற்றி பெற்ற நரேந்திர மோடிக்கு வெள்ளை மாளிகை அழைப்பு விடுத்துள்ளது.

2002ஆம் ஆண்டு குஜராத்தில நடைபெற்ற கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் மற்றும் அதன் எதிரொலியான கலவரங்களை மனித உரிமை மீறல் என்று குற்றம்சாட்டிய அமெரிக்கா, கடந்த 2005ஆம் ஆண்டு அந்நாட்டிடம் வீசா கேட்டு விண்ணப்பிப்பவர்களின் கறுப்புப் பட்டியலில் மோடியின் பெயரை இணைத்து அறிவிப்பு வெளியிட்டது.

இதன்பிறகு, பல சந்தர்ப்பங்களில் மோடிக்கு அமெரிக்க வீசா வழங்குவது தொடர்பாக பட்டும்படாமல் பேசி வந்த வெள்ளை மாளிகை அதிகாரிகள், 'வ்சா கேட்டு மோடி விண்ணப்பித்தால், ஏனைய விண்ணபங்களைப் போலவே அவரது விண்ணப்பமும் உரிய முறையில் பரிசீலிக்கப்படும். வீசா வழங்கப்படுமா? என்பது தொடர்பாக உத்தரவாதம் அளிக்க முடியாது என்று பதில் அளித்தது.

இந்நிலையில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல் வெற்றியின்படி, பா.ஜ.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதும், நரேந்திர மோடி நாட்டின் பிரதமராவதும் உறுதி செய்யப்பட்டுவிட்ட நிலையில், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா மோடிக்கு தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜே கர்னி கூறுகையில், வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தேர்தலில் பெரும்பானமை இடங்களில் வெற்றி பெற்ற பா.ஜ.க.வையும், நரேந்திர மோடியையும் நாங்கள் வாழ்த்துகிறோம்.

புதிய ஆட்சி அமைந்ததும், பிரதமர் மற்றும் அவரது தலைமையிலான அமைச்சரவையுடன் நெருக்கமாக பணியாற்றுவதை எதிர்நோக்குகிறோம் என்றும் இந்தியப் பிரதமரின் வருகையை அமெரிக்கா வரவேற்கும் எனவும் கூறியுள்ளார்.

உலகச் செய்திகள்

# மோடி, ஜெயலலிதாவுக்கு நடிகர் விஜய் வாழ்த்து



இந்திய அளவில் பா.ஜ.க.வும், தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வும் தேர்தலில் சாதனை புரிந்துள்ளனர்.

இதற்கு பல்வேறு தரப்பினரும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

நடிகர் விஜய்யும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார், இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் இந்திய அளவில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய அளவில் அதிக இடங்களைக் கைப்பற்றிய நரேந்திர மோடிக்கும், தமிழகத்தில் வரலாறு காணாத வெற்றியைப் பெற்றுள்ள முதல்வர் ஜெயலலிதாவுக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகளவில் மாபெரும் சக்தியாக திகழும் இந்த இரு தலைவர்களும் உலகளவில் இந்தியாவை வல்லரசு நாடாகவும், இந்திய அளவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாகவும் மாற்றிக் காட்டுவார்கள் என்ற கோடானு கோடி மக்களின் நம்பிக்கையில் நானும் ஒருவனாக இந்த வெற்றியை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறியுள்ளார்.

# மதம்மாறித் திருமணம் செய்த பெண்ணுக்கு தூக்குத்தண்டனை



சூடானில் மதம் மாறித் திருமணம் செய்த பெண்ணுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடான சூடானை சேர்ந்தவர் மெரியம் அட்ராப் அல் ஹாடி முகமது அப்துல்லா. என்பவரின் தாய் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். தந்தை முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்.

ஆனால் சிறு வயதில் இருந்தே இவர் தனது தாயின் பராமரிப்பில் வளர்ந்ததால் கிறிஸ்தவராக மாறிய இவர் தனது பெயரை மெரியம் யெக்யா இப்ராகிம் இசாக் என மாற்றிக் கொண்டார்.

இந்நிலையில் அவர் கிறிஸ்தவர் ஒருவரை திருமணம் செய்து கொண்டார். தற்போது ஒரு குழந்தைக்குத் தாயாகியுள்ளார். இவர் மதம் மாறித் திருமணம் செய்ததாக கூறி அவர் மீது கார்டோம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

ஜோர்டான் ஒரு முஸ்லிம் நாடு. இங்கு முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த ஒரு பெண் வேறு மதத்தினரை திருமணம் செய்ய அனுமதி இல்லை. இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது. அதில், மதம் மாறித்திருமணம் செய்த மரியத்துக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பிற்கு சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

# கடற்பிராந்தியத்தில் சர்ச்சை சீனாவை எச்சரிக்கிறது அமெரிக்கா

தெற்கு கடல் பகுதியில் சர்ச்சைக்குரிய நடவடிக்கைகளை உடனே நிறுத்துமாறு சீனாவுக்கு, அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

வியட்நாம் அருகே தெற்கு சீனக்கடல் பகுதியில் எண்ணெய் வள ஆய்வுப்பணிகளை கடந்த சில நாட்களுக்கு முன் சீனா தொடங்கியுள்ளது.

இது வியட்நாமுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக சீனாவுக்கு கண்டனம் தெரிவித்த வியட்நாம், தங்கள் நாட்டு கடல் பகுதியில் இருந்து உடனே வெளியேறுமாறு எச்சரிக்கையும் விடுத்தது.

தெற்கு சீனக்கடல் பகுதியில் சீனாவின் அத்துமீறல் விவகாரம் அமெரிக்காவுக்கும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக அமெரிக்கா, கடந்த வாரம் தனது கவலையை வெளியிட்டது.

இந்த நிலையில் தெற்கு சீனக்கடல் பகுதியில் சீனாவின் அத்துமீறல் நடவடிக்கைகள், சீனா-அமெரிக்கா இடையேயான உறவுகளை பாதிக்கும் என அமெரிக்கா மீண்டும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெள்ளை மாளிகை அதிகாரிகள் கருத்து வெளியிடும் போது,

'தெற்கு சீனக்கடல் பகுதியில் அண்டை நாடுகளுடன் சீனாவின் சர்ச்சைக்குரிய நடவடிக்கைகளால் அமெரிக்கா' சீனா இடையேயான உறவுகளில் சிக்கல் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், சீனாவுடன், அமெரிக்கா இணைந்து பணியாற்ற முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. என்று தெரிவித்தனர்.


இதேவேளை, சீன இராணுவ தலைவரை 'சந்தித்து பேசிய அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோபிடன் மற்றும்



உயர் அதிகாரிகள், சீனாவின் சர்ச்சைக்குரிய கடலோர நடவடிக்கைகள், அப்பகுதியில் ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலும், பிரச்சினையை தூண்டும் வகையிலும் அமைந்துள்ளதாக கூறி[illegible]. உடனே இந்த நடவடிக்கைகளை கண்டிப்பாக நிறுத்துமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

தெற்கு சீனக்கடல் பகுதியில் சீனாவின் நடவடிக்கைகளால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவும் தற்போது கண்டனம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# நடுவானில் வெடித்துச் சிதறியது ஏவுகணை



ரஷ்யா 'ஏ.எம்4 பி' என்ற அதிநவீன தகவல் தொடர்பு ஏவுகணையின் மூலம் விண்ணில் செலுத்திய செயற்கைக்கோள நடுவானில் வெடித்து சிதறியுள்ளது.

கஜகஸ்தானில் உள்ள பைகானூர் விண்வெளி தளத்தில் செயற்கைக்கோள் ஒன்று 175 கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்டது.

இந்தச் செயற்கை கோளுடன் பொருத்தப்பட்ட ஏவுகணை, விண்வெளி தளத்தில் இருந்து புறப்பட்டு, விண்ணில் பறந்த சுமார் 545 வினாடிகளிலேயே நடுவானில் வெடித்துச் சிதறியது.

இதனால் கரும்புகையுடன் தீப்பிழம்பாக எரிந்து, ஏவுகணையின் துண்டுகள் பூமியில் வந்து விழுந்தன.

ஏவுகணை வெடித்துச் சிதறிய காட்சி தொலைக்காட்சியில் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது. மேலும் ஏவுகணையின் புரோடான் கட்டுப்பாட்டு இயந்திரம் ஏற்பட்ட கோளாறு தான், இச்சம்பவம் நிகழ்வதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் முடிவுகள்

**இந்தியா**

| கட்சிகள் | | முடிவு |
|---|---|---|
| பா.ஜ. கூட்டணி | - | 336 |
| காங், கூட்டணி | - | 59 |
| திருணமுல் காங். | - | 34 |
| இடதுசாரி | - | 10 |
| சமாஜ்வாடி | - | 05 |
| பகுஜன் சமாஜ் | - | 0 |
| பிஜு ஜனதா | - | 20 |
| தெ.ரா.ச. | - | 11 |
| ஐ.ஜ.த. | - | 2 |
| ஆம் ஆத்மி | - | 4 |
| ஏனையவை | - | 62 |

**தமிழகம்**

| கட்சிகள் | | முடிவு |
|---|---|---|
| அ.தி.மு.க. | - | 37 |
| தி.மு.க. | - | |
| பா.ஜ.க. | - | 1 |
| காங்கிரஸ் | - | |
| ம.தி.மு.க. | - | |
| பா.ம.க. | - | 1 |
| தே.மு.தி.க. | - | |
| விசி | - | |
| ஏனையவை | - | |

# தி.மு.க. வின் தோல்வியை தாங்காது மயங்கிவிழுந்து உயிர் நீத்த தொண்டர்

தேர்தல் முடிவால் அதிர்ச்சியை தாங்க முடியாத தி.மு.க. தொண்டர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அடுத்த ராயண்டபுரத்தை சேர்ந்தவர் சின்னத்துரை (வயது- 61). என்பவர் சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்தி வந்தவராவர், இவர் தி.மு.க.வின் தீவிர தொண்டர்.

நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளை வீட்டில் இருந்தபடியே தனது குடும்பத்தினருடன் தொலைக்காட்சியில் பார்த்து கொண்டிருந்தபோது, தேர்தலில் தி.மு.க. ஒரு இடத்தில் கூட வெற்றிபெறாமல் தோல்வி அடைந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

சிறிது நேரத்தில் மயங்கி கீழே சரிந்த அவரை, குடும்பத்தினர் பார்த்த போது அவர் இறந்து போனது தெரியவந்தது.

# இயற்கைக்கு முரணான செயற்பாடுகளால் மாசடைந்துவரும் வவுனியாக் குளங்கள்

## மீன்பிடியாளர்கள், விவசாயிகள் கவலை



வவுனியாப் பிரதேசம் அதிகளவான குளங்களைக் கொண்டமைந்து இயற்கை எழிலோடு நீர்வளத்தையும் காத்து வருகின்றது. இவ்வாறான குளங்கள் அண்மைக்காலமாக மனிதர்களின் இயற்கைக்கு முரணான செயற்பாடுகளால் பெரும்பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

குறிப்பாக குளங்களுக்குள் அத்துமீறிய குடியிருப்புகளை நிர்மாணித்தல், குளங்களினுள் குப்பைகளைக் கொட்டுதல் என மனிதனால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயல்களால் குளங்களின் அழகு குறைவதுடன் குளங்களில் வாழும் மீன் வளமும் குறைவடைகிறது. வவுனியா நகர்ப் புறத்திலுள்ள வைரவபுளியங்குளம். வவுனியாக்குளம், பண்டாரிக்குளம் ஆகியவற்றில் பொதுமக்கள் குப்பைகளை கொட்டிவருவதனால் குளங்கள் வேகமாக மாசடைந்து வருகின்றன.

இதன் காரணமாக நன்னீர் மீன் பிடியாளர்கள் பாதிப்படைவதுடன் விவசாய நிலங்களுக்குள் பிளாஸ்ரிக் பொருட்கள் செல்வதனால் விவசாயச் செய்கையும் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இதேவேளை குப்பைகள் குளங்களினுள் கொட்டப்படுவதனால் குளங்களின் நீர் ஏந்துப் பிரதேசம் குறைவடைந்து மழைக் காலங்களில் குளங்களினுள் நீர் வடிந்தோட முடியாது மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்லும் நிலையும் தோன்றியுள்ளது. எனவே குளங்களினுள் குப்பை கொட்டுபவர்கள் தொடர்பில் வவுனியா நகரசபையினர் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டும் என விவசாயிகளும் நன்னீர் மீன்பிடியாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கனடாவின் புறக்கணிப்பு முடிவு; ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மாத்தறையில் இன்று நடைபெறவுள்ள யுத்த வெற்றிவிழா கொண்டாட்ட நிகழ்வில் கலந்து கொள்ளப்போவதில்லையென கனடா எடுத்துள்ள தீர்மானம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்லவென அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்ததாவது.

யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களானது உண்மையில் பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியாகும்.

படையினரின் தியாகம் காரணமாக இன்று தமிழ் மக்கள் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

நைஜீரியாவில் 200 பாடசாலைச் சிறுமிகள் கடத்தப்பட்ட போது சர்வதேசம் கவனம் செலுத்திய போதிலும், இலங்கையில் இடம்பெற்ற இவ்வாறான சம்பவங்களின் போது எவரும் குரல் கொடுக்கவில்லை.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது நாசிசவாதத்திற்கு எதிராக ஈட்டப்பட்ட வெற்றிக் கொண்டாட்டங்களில் கனடா பங்கேற்று வருகிறது. நாசிசமும் ஓர் பயங்கரவாதமே.

இன்றைய தினம் நடைபெறவுள்ள யுத்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகளில் பங்கேற்கவில்லை என்பதனை கனேடிய உயர்ஸ்தானிகர் ஊடகங்களுக்கு அறிவிக்காது, பாதுகாப்பு அமைச்சிடமே அறிவித்திருக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தனது வெளியுறவுக்கொள்கையை மாற்றியமைக்கவேண்டும் இந்தியா

## கோரிக்கை விடுக்கிறார் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

இந்தியா தனது வெளியுறவுக்கொள்கையை மாற்றியமைக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாணசபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் அமையவுள்ள புதிய இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியப் பொதுத்தேர்தலிலே 2009ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்த முடிவுகளில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றதனைத் தொடர்ந்துதான் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் நடைபெற்றன. மாறாக பாரதிய ஜனதாக்கட்சி வெற்றிபெற்றிருந்தால் நிலைமை மாறியிருக்கும் காலம் கடந்த நிலையில் ஐந்து வருடங்கள் கடந்த நிலையில் பாரதிய ஜனதாக்கட்சி வெற்றிபெற்றிருக்கின்றது. பாரதிய ஜனதாக் கட்சி தமிழர்களுக்கு தீங்கு எதனையும் செய்யவில்லை ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கத்தக்க வெளியுறவுக் கொள்கையை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கைவிடுத்ததுடன் பாரதிய ஜனதாக்கட்சிக்கும் நரேந்திரமோடிக்கும் ஈழத்தமிழர்கள் சார்பில் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். அத்துடன் தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகம் வெற்றியீட்டியது தொடர்பில் செல்வி ஜெயலலிதாவுக்கும் அவர் வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் ஈழ்த்தமிழர் நலன்சார்ந்த இந்திய மத்திய அரசிற்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு நினைவேந்தும் முகமாக வடமாகாண சபையில் நேற்று முன்தினம் நினைவுச்சுடர் ஏற்றும் நிகழ்வுக்காக சக உறுப்பினர்கள் 29பேருடன் கைத்தொலைபேசியில் தொடர்பு கொண்டேன் தொடர்பு கிடைக்கவில்லை என்று தெரிவித்த சிவாஜிலிங்கம் யாரையும் அழைக்கவில்லை என்பதனை மறுத்துள்ளார்.

(பா,25)

# கிளிநொச்சி கிணற்றிலிருந்து இதுவரை 14 கிளைமோர் மீட்பு

கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு அண்மையிலுள்ள கிணற்றிலிருந்து நேற்று முன்தினம் மேலும் 13 கிளைமோர் குண்டுகளும் 1 இயக்கும் ஆளியும் மீட்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி கிணற்றினை கடந்த மாதம் 15 ஆம் திகதி பொதுமக்கள் துப்புரவு செய்த போது, ஒரு கிளைமோர் குண்டு மீட்கப்பட்டதுடன், துப்புரவு பணி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து இராணுவத்தினரும் பொலிஸாரும் குறித்த கிணற்றிற்குப் பாதுகாப்பு வழங்கி வந்தனர்.

இந்நிலையில் மீண்டும் நேற்று முன்தினம் கிணற்றின் துப்பரவு பணியினை இராணுவத்தினர் மேற்கொண்ட போது, அதனுள் இருந்து 750 கிராம் நிறையுடைய 10 கிளைமோர் குண்டுகளும், 1500 கிராம் நிறையுடைய 3 கிளைமோர்களுமாக மொத்தம் 13 கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட கிளைமோர் குண்டுகள் பாவிக்க முடியாத அளவிற்கு செயலிழந்திருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பொலிஸார் கொலை; பிரதான சூத்திரதாரி கைது

குருணாகல் பிரதேசத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இரண்டு பொலிஸாரைக் கடத்திச்சென்று அவர்களில் ஒருவரை கொலை செய்தமை தொடர்பான பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி தெல்தெனிய பகுதியில் நேற்றுப் பிற்பகல் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதியன்று இரண்டு பொலிஸ்காரர்கள் கடமையில் இருந்தபோது அவர்களை கடத்திச்சென்று அவர்களில் ஒருவரை குழு ஒன்று கொலை செய்தது.

இந்தநிலையில் இந்தக்கொலையின் பின்னணியின் படையினருக்கு தொடர்பிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இந்திய...

பெறும். இதனால் ஏற்படும் தாக்கங்கள் இலங்கைக்கு மாத்திரமல்லாது, இந்தியா நோக்கிய மேற்குலக நாடுகளின் அணுகுமுறையிலும் இந்தியா - பாகிஸ்தான் உறவுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தும் எனவும் தயான் ஜயதிலக குறிப்பிட்டுள்ளார்.

### மோடியுடனான...

தரப்பினரும் ஏறத்தாழ ஒரே கருத்தைக்கொண்டுள்ள நிலையில், ஜெயலலிதாவுடனான நல்லுறவும் இலங்கைக்கு முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### அனைவருடனான...

கிக்கொண்டதன்படி பல முன்னேற்றங்கள் காணப்படவேண்டும்.

இந்த இணக்கத்தின்படி 13ஆவது அரசியல் திருத்தத்தை அமுல்படுத்த அனைத்து தரப்பினர் மத்தியிலும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச நியமப்படி மனித உரிமை காக்கப்படும் என்று இணங்கிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### 300இற்கும்...

வெட்டப்பட்டதுடன் 75இற்கும் மேற்பட்ட சேவல்களும் வெட்டப்பட்டன. பிரான்பற்று மற்றும் சுற்றுக் கிராமங்கள் பலவற்றில் இருந்து கடாக்கள் உழவுஇயந்திரங்கள், லாண்ட் மாஸ்டர்கள், பிக்கப் வாகனங்களில் ஊர்வலமாக ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு பூசைகளின் போது பலியிடப்பட்டன.

### கோவில்...

(வயது 25) மகிபால (வயது 24) ஆகியோரே படுகாயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

யாழ்ப்பாணத்திலிருந்து கே.கே.எஸ். வீதியூடாக சென்ற குறித்த வாகனம் திடீரென வேகக்கட்டுப்பாட்டை இழந்து நாச்சிமார் கோவில் வாகனசாலைக்குள் புகுந்தது இதனால் வாகனசாலைக் கட்டடம், கோவில வாகனங்கள் என்பன சேதமடைந்தன.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

(பா,25,48,68)

# தென் சீனக் கடல் சர்ச்சை; பிரதமரிடம் விளக்கம் கேட்ட சீனா

பிரதமர் டி.எம்.ஜெயரட்ணவைச் சந்தித்த கொழும்பிலுள்ள சீனத் தூதுவர் வூ ஜியாங் ஹாவோ, தென்சீனக் கடல் தொடர்பாக, வியட்னாமில் வெளியிட்ட கருத்துக் குறித்து விளக்கம் கேட்டுள்ளார்.

வியட்னாம் சென்றிருந்த பிரதமர் டி.எம்.ஜெயரட்ண, கடந்த 9 ஆம் திகதி அந்த நாட்டுப் பிரதமர் நுகுன்யென் டன்டங்கை சந்தித்த போது, தென்சீனக் கடல தொடர்பாக சீனாவுக்கும், வியட்னாமுக்கும் இடையிலான சர்ச்சையில், வியட்னாமின் நிலைப்பாட்டை இலங்கை ஆதரிப்பதாக, தெரிவித்திருப்பதாக வியட்னாமிய பிரதமர் பணியகத்தின் செய்திக்குறிப்பு ஒன்றில் கூறப்பட்டிருந்தது.

இதையடுத்து உடனடியாகவே இலங்கை வெளிவிவகார அமைச்சு அதுகுறித்து விளக்கமளித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டதுடன், தென் சீனக் கடல் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தது.

எனினும், சீன அரசாங்கம் இந்த விளக்கம் தொடர்பாகத் திருப்தி கொள்ளவில்லை என்று தெரிகிறது.

இந்தநிலையில், வியட்னாமில் இருந்து கொழும்பு திரும்பிய பிரதமர் டிஎம் ஜெயரட்னவை சீனத் தூதுவர், வூஜியாங் ஹாவோ கடந்த 12 ஆம் திகதி சந்தித்துப் பேசினார்.

இதன்போது, வியட்னாமில் அவர் வெளியிட்ட கருத்து தொடர்பாக தென் சீனக்கடல் விவகாரத்தில் இலங்கையினது நிலைப்பாடு குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது, சீனாவுக்கே இலங்கை ஆதரவளிப்பதாக, சிறிலங்கா பிரதமர், தெரிவித்துள்ளதாக, கொழும்பிலுள்ள சீனத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### வட, கிழக்கைச்..

சேர்ந்த சந்தேகநபர்களுக்கு சரீரப் பிணை வழங்குவதற்கு பிணையாளர்கள் இன்மையால் , 11 சந்தேகநபர்களும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.


இந்த 11 சந்தேகநபர்களில் இரண்டு பேர் மேலதிக விசாரணைகளுக்காக பூசா முகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மேலும் இரண்டு சந்தேகநபர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் துப்பாக்கி பயிற்சி பெற்றவர்கள் எனவும், ஒரு சந்தேக நபரிடம் ஆள் அடையாள அட்டை காணப்படவில்லை எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

யுத்த வெற்றிக் கொண்டாட்டங்கள் இன்று மாத்தறையில் இடம்பெறவுள்ள நிலையில், முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# சீனா குறித்த கொள்கையில் மாற்றம் செய்யாது இலங்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

சீனா தொடர்பான இலங்கையின் கொள்கைகள் ஒருபோதும் மாறாதெனவும், தென்சீனக்கடல் தொடர்பான விடயத்தில் சீனாவிற்கே ஆதரவளிக்கப்படுமெனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சூ கியூயிலியாங் தலைமையிலான சீனாவின் சக்தி வாய்ந்த உயர்மட்ட பாதுகாப்பு குழுவினருக்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, கருத்து வெளியிட்ட ஜெனரல் சூ கியூயிலியாங், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பரஸ்பர மூலோபாய நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதும், இரண்டு நாடுகளுக்கு இடையிலும், இரு ஆயுதப்படைகளுக்கு இடையிலுமான உறவுகளை புதிய மட்டத்துக்கு தரமுயர்த்துவதுமே தமது பயணத்தின் நோக்கம் என்று குறிப்பிட்டார்.

இலங்கை இராணுவம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், நன்றாக பயிற்சி பெற்ற -நன்றாக நிர்வகிக்கப்படும் ஒரு இராணுவம் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையில், இராணுவ மட்டத்திலான உறவுக்ளுக்கு முன்னுரிமை கொடுப்பது குறித்து சீனா ஆலோசித்து வருவதாகவும் ஜெனரல் சூ கியூயிலியாங் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தை தோற்கடித்து மற்றும் போருக்குப் பிந்திய அபிவிருத்திகளை மெற்கொண்டதற்காக அவர் ஜனாதிபதியை பாராட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, அனைத்துலக அரங்கிலும், ஒரே சீனா என்ற கொள்கை, தென்சீனக்கடல் விவகாரம் உள்ளிட்ட பிராந்திய விவகாரங்களிலும், சீனாவுக்கு இலங்கை ஆதரவு வழங்கும் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

சீனா தொடர்பான இலங்கையின் கொள்கைகள் மாறவில்லை என்றும், ஒருபோதும் மாறாது என்றும் சீன ஜெனரலிடம் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் மூலோபாய பரஸ்பர நம்பிக்கையையும், இரு நாடுகளின் ஆயுதப்படைகளுக்கு இடையிலான உறவுகளையும் புதிய மட்டத்துக்கு கொண்டு செல்லவும், இந்தச்சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

# "2014" வாக்காளர் இடாப்பு திருத்தும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

2014ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு திருத்தப் பணிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம். எம். முஹம்மத் தெரிவித்தார்.

வாக்காளர் இடாப்பு திருத்தும் பணிகள் சகல மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் கண்காணிப்பின் கீழ் இடம் பெற்று வருகின்றன.

வாக்காளர் இடாப்பு திருத்தப்படுவதற்கு முன்னர் நாடு பூராவும் உள்ள சுமார் 14 ஆயிரம கிராம உத்தியோகத்தர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதன்படி சகல கிராம உத்தியோகத்தர்களும் தமது பிரதேசத்தில் உள்ள சகல வீடுகளுக்கும் சென்று வாக்காளர் இடாப்பு திருத்தும் பணிகளை முன்னெடுக்க இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வாக்காளர் இடாப்பின் மாதிரி விண்ணப்பப்படிவங்களை ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் சகல வீடுகளுக்கும் விநியோகிக்குமாறு கிராம உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

ஜூன் 15 ஆம் திகதிக்கு பின்னர் வாக்காளர் இடாப்பின் இரண்டாம் கட்ட திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத்தேர்தல் நடைபெறும் பட்சத்தில் 2014 வாக்காளர் இடாப்பின் பிரகாரமே தேர்தல் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் மானியத்திற்கு பதிலாக மீனவர்களுக்கு மாற்று உபகரணங்கள்

மீனவர்களுக்கான எரிபொருள் மானியத்திற்கு பதிலாக வேறு பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு சுமார் 29 ஆயிரம் மீனவர்கள் விண்ணப்பித்துள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி மீனவர்களது விண்ணப்பங்க்ள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என்.டீ. ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மானியத்திற்கு பதிலாக மீன்பிடி வலைகள், படகுகள், ஜீ.ஜீ.எஸ் உபகரணங்கள் மற்றும் உயிர் பாதுகாப்பு அங்கிகள் என்பனவற்றை மீனவர்கள் எதிர்பார்த்துள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இதற்கமைய, மீனவர்களுக்கான மானியப் பொருட்கள் அடுத்த மாதம் முதல் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். மீனவர்களுக்கான மாற்று மானியப் பொருட்கள் வழங்குவதற்கு நான்காயிரத்து 400 மில்லியன் ரூபா செலவாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தொற்றுநோய் தடை குறித்து ஆசிய, பசுபிக் மாநாடு

(கொழும்பு)

தொற்றுநோய் ஒழிப்பு மற்றும் பொது சுகாதார முகாமைத்துவம் தொடர்பான ஆசிய பசுபிக் பிராந்திய ஒத்துழைப்பு மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது.

விமானங்கள் மூலம் வருகை தரும் பயணிகள் ஊடாக தொற்றுநோய்கள் பரவுவதை தடுப்பதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

இந்த மாநாடு எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

தொற்றுநோய்கள் இலங்கையில் பரவுவவதை தடுப்பதற்காக சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது, சர்வதேச தொடர்புகள் மற்றும் தகவல் பரிமாற்றத்தை விஸ்தரிப்பது, பிராந்திய விமான சேவைகள் மற்றும் சுதாதார அதிகாரிகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளது

தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் பரவி வருகின்ற மார்க் கொரொனா வைரஸ் போன்ற வைரஸ்கள் நாட்டில் பரவுவதை தடுப்பதற்கு இந்த மாநாடு முக்கியத்துவம் வாய்நததாக அமையும் என சிவில் விமான சேவைகள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது

# ஏற்றுமதி செய்யப்படுகிறது மாதாந்தம் 2 இலட்சம் இளநீர்

இலங்கையிலிருந்து மாதாந்தம் 200,000 இளநீர் சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் பெரும்பாலும் உள்நாட்டு சந்தைகளுக்கே இளநீர் விநியோகிக்கப்பட்டதாக நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜயந்த குணதிலக்க தெரிவித்தார்

வருடாந்தம் சுமார் 6,500 இளநீர் மாத்திரமே ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் தற்போது சர்வதேச சந்தையில் இளநீருக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கே அதிகளவில் இளநீர் ஏற்றுமதி செயயப்படுகிறது.

மத்திய கிழக்கு நாடுகளிலும் இலங்கையின் இளநீருக்கு கேள்வி அதிகரித்துள்ளதாக தெங்கு ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

இளநீர் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் விமானம் மூலம் அதனை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரயிலில் மோதி வயோதிபர் பலி

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திருமுறுகண்டி செல்வபுரம் பகுதியில் ரயிலில் மோதி முதிய்வர் உயிரிழந்துள்ளார்.

செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த மருதமுத்துமாரியப்பன் (வயது75) என்பவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இவர் ரயிலில் மோதியிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்கலை மாணவர் கைது; பேராசிரியர்கள் கண்டனம்

பல்கலைக்கழக மாணவர்கள் 16 பேரை நேற்று முன்தினம் திடீரென்று கைது செய்தமை மாணவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்காது அவர்களின் செயற்பாட்டை மீண்டும் தூண்டும் ஓர் விடயமாகும் என்று பல்கலைக்கழக பேராசிரியர்கள் நேற்றுக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் தலைவர் வைத்தியர். சந்திரகுப்தா தேனுவர இது தொடர்பில் தெரிவிக்கையில்,

மாணவர்களை அச்சுறுத்துவது மாணவர்களின் பிரச்சினைக்கு தீர்வாகிவிடாது. அது அவர்களின் குறைகளை தீர்த்து வைக்க முடியாத தோல்வியாக அமையும். மாணவர்கள் சுகாதார அறிவியலின் தரம் தொடர்பாகவும் கல்வியாண்டை குறைத்தது தொடர்பாகவும் கேள்விகளை எழுப்பியதுடன் தங்களது கவலைகளையும் தெரிவித்திருந்தனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் மூன்று மாதகாலமாக தெரிவித்திருந்திருந்த போதிலும் உரிய பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

மேலும் நாடு பூராகவும் மஹாபொல புலமைப்பரிசிலினை உயர்த்துமாறும் கல்விக்கான தரத்தை மேம்படுத்துமாறும் மாணவக்குழுக்கள் கேள்விகளை எழுப்பி நியாயம் கேட்டனர்.

நாங்கள் அதிகாரிகளிடம் கைது செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுவிக்குமாறு கோருகின்றோம். அது மாத்திரமன்றி மாணவர்கள்களின் கவலைகளையும் பிரச்சினைகளையும் தீர்த்துவைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

இளநிலைப்பட்டதாரிகளை தேவையற்ற முறையில் கைது செய்யாது அவர்களிடம் என்ன பிரச்சினை என்று கேட்டு தெரிந்து கொண்டு விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

# நெடியவனை கையளிக்கக் கோரி நோர்வேக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## இன்று நடத்துகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

நோர்வேக்கு எதிரான போராட்டத்தை ஜாதிக ஹெல உறுமய மீண்டும் இன்றைய தினம் ஆரம்பிக்கவுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் போர்நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருந்த 2002-2005 காலப்பகுதியில் நோர்வேக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வந்தது. இந்த நிலையில், போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் கழித்து, இன்று மீண்டும் நோர்வே தூதரகத்துக்கு எதிரான போராட்டத்தில் ஜாதிக ஹெல உறுமய குதிக்கவுள்ளது.

சுதந்திர சதுக்கத்தில் இருந்து நோர்வேத் தூதரகம் நோக்கி எதிர்ப்புப் பேரணியை நடத்தவுள்ளது.

இலங்கையினால் தேடப்படும் விடுதலைப் புலிகளின அனைத்துலக வலையமைப்பின் தலைவராக உள்ள நெடியவனை தங்க வைத்துள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்துள்ளார். இன்று பிற்பகல் 2 மணிக்குத் தொடங்கும் இந்தப் பேரணி, இலங்கையிடம் நெடியவனைக் கையளிக்கக் கோரும் மனுவை நோர்வே தூதரகத்திடம் கையளிப்பதுடன் நிறைவடையும்.

அதேவேளை, இன்று பிற்பகல், கொழும்பு நகர மண்டபத்தில், போர் வெற்றிக் கொண்டாட்டத்தையும் ஜாதிக ஹெல உறுமய தனியாக நடத்தவுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.